# கிழக்கில் மேலும் இரு கொவிட் மரணங்கள்

( படுவான் பாலகன்)

கிழக்கு மாகாணத்தில் நேற்று மேலும் இரு கொவிட் தொற்று மரணங்கள் பதிவாகியுள்ளதாக மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் டாக்டர் அழகையா லதாகரன் தெரிவித்தார். மரணமடைந்தவர்கள் இருவரும் கல்முனைப்பிராந்தியத்தைச்சேர்ந்த சாய்ந்தமருது சுகாதாரப்பிரிவைச்சேர்ந்தவர்கள். குறிப்பிட்ட மரணத்துடன் மாகாணத்தில் 16பேர் மரணித்துள்ளதுள்ளனர்.

மரணித்தவர்களுள் கல்முனைபிராந்தியத்தைச்சேர்ந்தவர்கள் 09, மட்டக்களப்பு 06, அம்பாறை 01 எனவும் மேலும் தெரிவித்தார்.


# சுபீட்சம்

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே








ஞாயிற்றுக்கிழமை 31.01.2021 supeedsam.com supeedsam@gmail.com


## பொதுமக்களுக்கு காத்தான்குடி கொவிட் 19 தடுப்பு செயலணி விடுக்கும் முக்கிய அறிவித்தல்

( ரீ.எல்.ஜவ்பர்கான் )

நேற்று 30.01.2021ம் திகதி இடம் பெற்ற காத்தான்குடி நகருக்கான கொவிட் 19 தடுப்பு செயலணியின் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என நகர முதல்வர், நகரசபை, காத்தான்குடி.

சுகாதார வைத்திய அதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், காத்தான்குடி என வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. ஏற்கனவே தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டிருந்த


02 ஆம் பக்கத்தில்...


# கிழக்கு மாகாணத்தில் 2639 பேருக்கு நேற்று தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளது





( வேதாந்தி)

கிழக்கு மாகாணத்தில் 113 நிலையங்கள் ஊடாக நேற்று மாத்திரம் 2639 கொவிட் தடுப்பூசிகள் சுகாதார முன்னிலை உத்தியோகத்தர்களுக்கு ஏற்றப்பட்டுள்ளதாக மாகாணசுகாதாரப்பணிப்பாளர் டாக்டர் அழகையா லதாகரன் தெரிவித்தார்.

இதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 1230பேருக்கும் ,கல்முனையில் 998பேருக்கும், திருகோணமலையில் 390 பேருக்கும் ,அம்பாறையில் 221பேருக்கம் ஏற்றப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் கொவிட் 19 ற்கான 14010தடுப்பூசிகள் 258 நிலையங்களில். ஏற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சியோருக்கு இன்றும் நாளையும் தடுப்பூசிகள் ஏற்றப்படும் என்றார்.

## காத்தான்குடியில் சிலபகுதிகளை விடுவிக்கின்றேன்

( வேதாந்தி)

கடந்த மார்ச்மாதம் 25ம்திகதி சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட2168/6ம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய நோய்பரவும் அச்சம் உள்ள பகுதிகள் என அடையாளம் காணப்பட்ட பகுதிகள்


02 ஆம் பக்கத்தில்...


### நகரசபைத்தலைவர்; அவ்வாறு செய்ய முடியாது சுகாதார அதிகாரிகள்.

## மட்டக்களப்பில் தடுப்பூசி ஏற்றப்பட்டமை தொடர்பில் எதுவித முறைப்பாடுகளும் இல்லை

### பிராந்திய தொற்று நோயியல் வைத்திய அதிகாரி வே.குணராஜசேகரம்

(கமல்)



மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு வழங்கப்பட்ட 3400 கொரணா தடுப்பூசிகளில் நேற்றைய 1230 தினம் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு அறிக்கைகள் கிடைத்துள்ளது. இது தொடர்பில் எவ்விதமான முறைபாடுகளும் கிடைக்கவில்லை என மட்டக்களப்பு பிராந்திய தொற்று நோயியல்


02 ஆம் பக்கத்தில்...


## ஐ.நா மனித உரிமைகள் பேரவை ஜனாதிபதி ஆணைக்குழுவை நிராகரிக்கும்

### பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்

( குமணன்)

ஐ.நா மனித உரிமைகள் பேரவை ஜனாதிபதி ஆணைக்குழுவை நிராகரிக்கும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் பேச்சாளருமாகிய எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.


02 ஆம் பக்கத்தில்...


## பேரினவாதிகளின் அதர்மத்திற்கு எதிராக அறவழியில் எழுச்சி கொள்வோம்

### ஞா.ஸ்ரீநேசன் ,முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

தமிழ் பேசும் மக்களே........!!!

பேரினவாதிகளின் அதர்மத்திற்கு எதிராக அறவழியில் எழுச்சி கொள்வோம்.............

பொத்துவில் இருந்து பொலிகண்டிவரை (03/02-06/02/2021) என்ற தலைப்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் ரிஅறிக்கையில்


02 ஆம் பக்கத்தில்...


## குருந்தூரில் தமிழர்களின் வழிபாட்டு அடையாளம் காணாமல் ஆக்கப்பட்ட விவகாரம்; மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும் சுமந்திரன்

### விதுர விக்கிரமநாயக்க ,அவரின் கூட்டாளிகளுக்கெதிராகவும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு

சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையிலிருந்த தமிழர்களின் வழிபாட்டு அடையாளங்கள் காணாமலாக்கப்பட்டமைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும் என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, அவரோடு சேர்ந்தவர்களுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கொன்றினையும் தொடரவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

குருந்தூர் மலையில் தமிழர்களின் வழிபாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட்டமை









## பல்கலைக்கழக வரலாற்றிலே இலங்கையில் முதல் தடவையாக மட்டக்களப்பில் கொவிட் சிகிச்சை நிலையத்திலிருந்து பரீட்சை எழுதும் மாணவர்கள்

(ரக்ஸனா)

கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்ற 4 மாணவர்கள் கொவிட் 19 தொற்றுக்கு இலக்காகி தற்போது அவர்கள் பெரியகல்லாறு பிரதேச வைத்தியசாலை கொவிட் 19 இடைநிலைப் பராமரிப்பு நிலையத்தில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்ற இந்நிலையில் வைத்தியசாலையில் இருந்த வண்ணமே தற்போது அவர்கள் பரீட்சையை எழுதி வருகின்றார்கள். கிழக்குப் பல்கலைக் கழகத்தின்


02 ஆம் பக்கத்தில்...








## மன்னாருக்கு 1280 கொரோனா தடுப்பூசிகள் தடுப்பு நடவடிக்கை நேற்று ஆரம்பம்

( வாஸ் கூஞ்ஞ)

மன்னாரில் கொரோனா தொற்று நோய்க்கான தடுப்பூசி வழங்கும் பணிகள் சனிக்கிழமை (30.01.2021) ஆரம்பமாகியுள்ளது.

இதில் முதலாவது தடுப்பூசி கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகளில் இரவு பகல் பாராது பணியாற்றிவரும் பொது சுகாதார பரிசோதகர்களுக்கு அவர்களின்


02 ஆம் பக்கத்தில்...

# காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் உறவுகள் கிடைக்கும் வரைக்கும் எங்களுக்கு சுதந்திரம் இல்லை

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்

(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 1424 ஆவது நாளாகவும் தொடர் போராட்டம் மேற்கொண்டு வரும் வலிந்து காணமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கத்தின் தலைவி ம.ஈஸ்வரி ஊடக சந்திப்பு ஒன்றினை 30.01.21 அன்று நடத்தியுள்ளனர்.

இதன்போது அவர் கருத்து தெரிவிக்கையில்;

பெப்ரவரி 04 ஆம் திகதி இலங்கையின் சுதந்திரதினம் அன்றைய நாள் காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் உறவுகள் கிடைக்கும் வரைக்கும் எங்களுக்கு சுதந்திரம் இல்லை.

சுதந்திர தினத்தினை நாங்கள் கரி நாளாக புறக்கணித்து கறுப்பு பட்டி அணிந்து உணவுத்தவிர்ப்பு போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளோம்.

எதிர்வரும் ஐ.நா சபையின் அமர்வில் எங்களுக்கான தீர்வு கிடைக்கவேண்டும் தொடர்ச்சியாக எங்கள் உறவுகளை நாங்கள் தேடிக்கொண்டிருக்கின்றோம் நான்கு ஆண்டுகளை கடந்த நிலையிலும் வீதியில் இறங்கி தொடர்சியாக போராட்டம் மேற்கொண்டு வருகின்றோம். எதிர்



வரும் ஐ.நா அமர்வில் இலங்கை அரசிற்கு எந்த காலநீடிப்பும் கொடுக்காமல் எங்களுக்கான நீதியினை பெற்றுதர வேண்டும். சர்வதேச விசாரணைதான் வேணும் என்று சொல்லி நிக்கின்றோம்.

இலங்கையில் பாதிக்கப்பட்ட சிறுபான்மை மக்களுக்கான நீதியினை பெற்றுத்தரமுடியவில்லை இருந்தும் நாங்கள் அழுத்தங்களை கொடுக்கின்றோம் காணாமல் போன பிள்ளைகளை தேடிய பெற்றோர்கள் தொடர்ச்சியாக இறந்து கொண்டு போகின்றார்கள்.

கிளிநொச்சி கந்தசாமி ஆலய முன்றலில் எதிர்வரும் 02 ஆம் திகதி தொடக்கம் 06 ஆம் திகதி வரை உணவுத்தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் உலக நாடுகளில் உள்ள மக்கள் எங்களுக்கான ஆதரவினை தரவேண்டும் குரல் கெடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பல்கலைக்கழக வரலாற்றிலே இலங்கையில் முதல் ...

கலை கலாசார பீடத்தின் இறுதி வருட இரண்டாம் தவணைப் பரீட்சையையே அவர்கள் இவ்வாறு எழுதி வருகின்றார்கள்.

எமது 4 மாணவர்கள் கெரோனா தொற்றுக்குள்ளானதாக அடையாளம் காணப்பட்டு, அவர்கள் அனைவரும் மட்டக்களப்பு பெரியகல்லாறு பிரதேச வைத்தியசாலை கொவிட் 19 இடைநிலைப் பராமரிப்பு நிலையத்திற்கு அனுமதிக்கப்பட்டு தற்போது சிகிச்சை பெற்று வருகின்றார்கள். இந்நிலையில் எமது மாணவர்களுக்குரிய பரீட்சை 29, 30, 31, ஆகிய 3 நாட்களும் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு கொவிட் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வரும் மாணவர்கள் பரீட்சை எழுதுவதற்குரிய நடவடிக்கைகளை இலங்கையிலுள்ள ஏனைய பல்கலைக் கழகங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கலை கலாசார பீடம் எமது பல்கலைக் கழகத்தின் உப வேந்தரின் அனுமதியுடன் துணிந்து செயற்பட்டு, சகல வைத்திய நெறிமுறைகளையும், பின்பற்றி, பெரியகல்லாறு பிரதேச வைத்தியசாலையில் இருந்தவண்ணமே பரீட்சைக்குரிய மண்டப ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு எமது 4 மாணவர்களும். தற்போது பரீட்சை எழுதிவருகின்றார்கள்.

என கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி கலாநிதி கே.கெனடி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

ஒரே நேரத்திலும் கிழக்குப் பல்கலைக் ககழத்திலும், பெரிய கல்லாறு வைத்தியசாலையியுலும் எமது மாணவர்கள் பரீட்சையை எழுதி வருகின்றனார்கள். 3 நாட்களும் காலை 10 மணி முதல் மாலை ஒரு மணிவலையில் பரீட்சை நடைபெற்று வருகின்றது. இதற்குரிய சகல ஒழுங்குகளையும் சுகாதாரத்துறையினர் ஏற்படுத்தித் தந்துள்ளார்கள். அதனை நாங்கள் சீ.சீ.ரிவி கமரா மூலம் நாம் கண்காணித்து வருகின்றோம். கொவிட் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வரும் மாணவர்கள் வைத்தியசாலையில் இருந்துகொண்டே பரீட்சையை எழுதுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய எமது பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் வை.சி.றாகல், பதிவாளர், பகீரதன், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி அ.லாதாகரன், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி மயூரன், மாவட்ட கொரோனா தடுப்பு இணைப்பாளர் வைத்திய கலாநிதி அச்சுதன், மற்றும், பெரியகல்லாறு பிரதேச வைத்தயிசாலையின் வைத்திய அதிகாரி, சிறிவித்தியன், உள்ளிட்ட சுகாதார அதிகாரிகள், மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது இந்த செயற்பாட்டைப் போல் ஏனைய பல்கலைக் கழகங்களும் பின்பற்றினால் நன்றாக அமையும், காரணம் மாணவர்களுக்கு எதுவித பயமோ, அச்சமோ இல்லாமல், அவர்கள் தமது பரீட்சையை சுயமாக எழுதுவதற்கு, முடியும். இதுவரையில் கொவிட் தொற்றுக்குள்ளாகிய கல்விப் பொதுத்தர உயர்தர மாணவர்கள் மாத்திரம்தான் இவ்வாறு தனியாக பரீட்சை நடாத்தப்பட்டது. இது பல்கலைக் கழக வராலாற்றிலே இலங்கையில் முதல் தடவை நடைபெறுகின்றது. என கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி கலாநிதி கே.கெனடி மேலும் தெரிவித்தார்.

# குருந்தூரில் தமிழர்களின் வழிபாட்டு அடையாளம் காணாமல்...

தொடர்பில் வழக்கொன்றினைத் தொடர்வது தொடர்பில், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், மற்றும் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் 30.01.2021 இன்று வவுனியாவிலுள்ள தமிழரசுக்கட்சி காரியாலயத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனைச் சந்தித்து கலந்துரையாடியதுடன், வழக்குத் தொடர்வதற்காக சில ஆவணங்களையும் கையளித்திருந்தனர்

குறித்த சந்திப்பின் பின் ஊடகங்களுக்குக் குருத்துத் தெரிவிக்கும்போதே சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

குருந்தூர் மலையில் இருந்த சூலம் உடைக்கப்பட்ட விடயம் சம்பந்தமாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், பாராளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், சாள்ஸ் ஆகியோர் நேரிலே சென்று பார்வையிட்ட பின்பு ரவிகரன் முல்லைத்தீவு போலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருக்கின்றார்.

அதனைத் தொடர்ந்து 29.01.2021 நேற்றைய தினம் போலீசாரோடு குருந்தூர்மலைக்குப் போய் உடைக்கப்பட்ட தடையங்கள் எல்லாவற்றையும் ரவிகரன் காண்பித்திருந்தார்.

ஆகையினாலே அங்கே இருந்தது உடைக்கப்பட்டதென்பது ஊர்ஜிதமாக்கப்பட்டிருக்கின்றது.

இதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்திலே, அல்லது மேன்முறையிட்டு நீதிமன்றத்திலே வழக்கொன்றை நாங்கள் தாக்கல்செய்யவுளளோம்.

ஏற்கனவே முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தினாலே கொடுக்கப்பட்ட உத்தரவினை மீறி, அந்த உத்தரவிற்கு எதிராக செயற்பட்டதன் காரணமாக, அந்த நீதிமன்ற உத்தரவினை மீறிதற்காக, நீதிமன்றினை அவமதித்த வழக்கொன்றும் மேன்முறையிட்டு நீதிமன்றிலே நாங்கள் உடனடியாகத் தாக்கல் செய்வோம்.

அது இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவிற்கும் அவரோடு சேர்ந்தவர்களுக்கும் எதிராக அந்த வழக்குத் தாக்கல் செய்யப்படும்.

# மன்னாருக்கு 1280 கொரோனா தடுப்பூசிகள்...

சேவையை கௌரவித்து இவ் தடுப்பூசிகள் வழங்கும் நிகழ்வாக இது அமைவதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மன்னாருக்கு இதுவரைக்கும் 1280 கொரோனா தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இவைகள் முதலில் அனைத்து சுகாதார சேவைகளில் ஈடுபடுவோருக்கு வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் மன்னாடருக்கு வழங்கப்பட்ட தடுப்பூசிகளின் முதலாவது ஊசி மன்னார் வைத்திய அதிகாரி பிரிவின் தலைமை பொது சுகாதார பரிசோதகர் வின்சென்ட் என்பவருக்கு போடப்பட்டதாகவும் தொடர்ந்து ஏனையவர்களுக்கு இன்று முதல் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐ.நா மனித உரிமைகள் பேரவை ஜனாதிபதி ஆணைக்குழுவை நிராகரிக்கும்...

இலங்கை தமிழரசு கட்சியின் அரசியல் குழு கூட்டம் நிறைவு பெற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்..

இன்றைய கூட்டத்தில் விஷேடமாக வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழர் பகுதிகளில் நில அபகரிப்பு வெவ்வேறு வடிவங்களில் இடம்பெறுகின்றது. பல்வேறு சட்டங்களை பாவித்து எங்களுடைய மக்களின் வழிபாட்டு தலங்களை மாற்றியக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் தற்போது நில அபகரிப்பில் ஈடுபட்டு இருக்கிறார்கள் தொல்லியல் திணைக்களம் வருகை தந்து அடையாளப்படுத்தி வருகின்றது ஆராய்ச்சி செய்கின்றது இதை தடுப்பது பற்றி தமிழ்தேசிய கட்சிகள் இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் முடிவெடுக்கப்பட்டது.

வட கிழக்கு சிவில் அமைப்புக்கள் மதஸ்தாபனங்கள் இப்பொழுது பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை பேரணினை அரசியல் கைதிகள் விடையம், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் , நீண்டகால பிரச்சினைகள் மற்றும் ஜனாசா எரிப்பு விவகாரம்,மலையக மக்களின் 1000ரூபாய் சம்பள விவகாரம் தொடர்பாக நீண்ட பட்டியல் தொடர்பாக சிவில் அமைப்புகளின் , போராட்டத்திற்கு அரசியல் கட்சி என்ற வகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவினை வழங்கவேண்டிய பொறுப்பு உள்ளது.

எதிர்வரும் ஐக்கிய நாடுகள் சபை கூட்டத் தொடர் சம்பந்தமாகவும், மூன்று கட்சிகள் சேர்ந்து அனுப்பிய கடிதம் சம்பந்தமாகவும் இன்று கலந்துரையாடினோம் இது முக்கியமான ஒரு விடையம் இந்த ஒற்றுமை தொடர் வேண்டும் கடந்த காலத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு என்று செயறபட்டோம் தற்போது இரு தமிழ் தேசிய கட்சிகளின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இருக்கின்ற படியினால் தமிழ் தேசிய கட்சிகள் என்பதில் ஏனைய இரு கட்சிகளுக்கும் பங்கு உள்ளது . எமது விண்ணப்பத்தை 4% உறுப்பு நாடுகளுக்கு அனுப்பி வைத்திருக்கின்றோம்.அங்கு இடம்பெறும் தீர்மானம் குறித்து தொடர்ந்து ஆராய இருக்கின்றோம்.

ஜனாதிபதி ஆணைக்குழு என்பது கண்துடைப்பு நாடகம் ஆணைக்குழுக்களின் அறிக்கையை ஆராய இன்னொரு ஆணைக்குழு அவர்களில் எந்தவொரு நம்பிக்கையும் இல்லை உள்நாட்டிலே அனைத்தையும் செய்யுது முடிப்போம் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடு தேவையில்லை என்று கடந்த பெப்ரவரி மாதம் கடிதம் மூலம் அறிவித்த அரசாங்கம் இந்த பெப்ரவரி மாதத்திற்கு முன்பதாக ஆணைக்குழுவை நியமித்து உள்ளமை அரசாங்கம் சர்வதேசத்தை முட்டாளாக்குகின்ற விடையத்தை கைவிட்டு நேர்மையாக செயற்பட வேண்டும்.

மகிந்த ராஜபக்ச அமைத்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்தினாலே எவ்வளவு தூரம் முன்னேறலாம். இவர்களது ஆணைக்குழுவை சர்வதேசம் ஏற்றுக்கொள்ள போவதேயில்லை.இதனை ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை நிராகரிக்கும் என நம்புகின்றோம்.

கடந்த நல்லாட்சி அரசு நல்லிணக்க அடிப்படையில் சிறிய சமிக்ஞைகளை வெளிப்படுத்தியதன் நிமிர்தம் ஜனாதிபதி வேறு திசைகளில் பயணிக்க தயாராகி விட்டோம் என்ற சமிக்ஞைக்கு ஆதரவாக நானும் (சுமந்திரனனும்) சம்பந்தன் அவர்களும் நல்லெண்ண அடிப்படையில் சுதந்திர தின நிகழ்வுகளில் பங்கெடுத்தோம் அந்த அரசின் செயற்பாடுகள் திசை மாறி எங்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை மறந்ததன் காரணமாக நாங்கள் அவ்வாறான நிகழ்வுகளை புறக்கணித்தோம் இனிவரும் காலங்களில் சுதந்திர தின நிகழ்வுகளில் பங்குபற்றபோவதில்லை என குறிப்பிட்டார்.

மூடிய அறைக்குள் இடம்பெற்ற கூட்டத்தில் வடமாகாண சபை முதலமைச்சர் வேட்பாளராக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவை நிறுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அன்பு கட்டளை இட புன்முறுவலுடன் ஏற்க மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் மாவை சேனாதிராஜா உள்ளக பகையை இருவரும் மனம் விட்டு பேசி ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்று ஏனைய உறுப்பினர்கள் கூற ஏற்று செய்தியாளர் சந்திப்பிலும் ஒன்றாக கலந்து கொண்டனர்.

தமிழரசு கட்சியின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் மாவை சேனாதிராஜாவை முதலமைச்சர் ஆகுவதற்கு பாடுபடுவதாக கூறியமை குறிப்பிடத்தக்கது.

இந்த அரசியல் குழு கூட்டத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன்,சீன.சிறிதரன் , தவராசா கலையரசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள்,மாவை சேனாதிராஜா, பொன் செல்வராஜா ,முன்னாள் வட மாகாண சபை அவை தலைவர் சீ.வீ.கே.சிவஞ்ஞானம், முன்னாள் வட மாகாண சபை சுகாதார அமைச்சர் வைத்தியர் சத்தியலிங்கம் ஆகியோர் பிரசன்னமாகி இருந்தனர்.

# பேரினவாதிகளின் அதர்மத்திற்கு எதிராக...

தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது

தமிழ்பேசும் மக்களே நாம் மதத்தால் இந்துவாகவோ, மாண்புறு முஸ்லிமாகவோ, வேதம் பயிலும் கிறிஸ்தவனாகவோ இருக்கலாம்.ஆனால் மொழியால் நாம் தமிழ் பேசும் உறவுகள் ஆவோம்.அதேவேளை வடக்கு, கிழக்கு, மலையகம் சார்ந்து வாழ்ந்தாலும் நாம் தமிழர்கள் எனபதை அறிவோம். ஆனால் துரதிஸ்டவசமாக நாம் 26% இந்நாட்டில் வாழ்வதால், %4% ஆன சிங்கள மக்ளின் வாக்க்குகளைப் பெறுகின்ற பேரினவாதிகள் எமது உயிர், உடைமை, உரிமை, கலாசாரச் சான்றுகள், காணிகள் அனைத்தையும் கட்டம் கட்டமாகப் பறித்தார்கள், பறிக்கிறார்கள். தொல்லியல், வனசீவராசிகள், வனவளப் பாதுகாப்பு, பௌத்தசாசனம், மகாவலி அபிவிருத்தி அமைச்சுகள், திணைக்களங்கள், அதிகாரசபைகள் என்பன இன்று சட்டங்கள், சம்பிரதாயங்கள், நெறிமுறைகள், மனித விழுமியங்களுக்கு அப்பால் சென்று தமிழ் பேசும் மக்களின் காணிகளைக் கையகப்படுத்துவதிலும், கலாசாரச் சான்றுகளை அகற்றுவதிலும், அழிப்பதிலும் ஈடுபட்டு வருகின்றன.

தொல்லியல் இடங்களை அடையாளம் காணுதல் என்ற போர்வையில் தமிழ் பேசுனரின் காலாசாரங்களை சிதைப்பதும், பௌத்தமயமாக்கலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.மேலும் தொல்லியல் இடங்கள், புனித பூமி, பயிர்ச்செய்கை என்ற அடிப்படையில் தமிழ் பேசுவோரின் காணிகள் அபகரிக்கப்படுகின்றன.அயல் மாவட்டச்சிங்களவர்கள் குடியேற்றப்படுகின்றனர்.

கொவிட் தாக்கத்தினால் மரணிக்கும் முஸ்லிங்களின் ஜனாசாக்கள் எரிக்கப்படுகின்றன.இவற்றை எல்லாம் ஜனநாயகரீதியாகவும், சட்டரீதியாகவும், அஹிம்சை ரீதியாகவும் எதிர்க்க வேண்டியதும், தடுக்க வேண்டியதும் காலத்தின் கட்டாய தேவையாகவுள்ளது.

பதவிகளுக்காகப் பேரினவாத அரசிடம் சோரமாகிய சரணாகதித் தமிழ் அரசியல் வாதிகள் தமிழ் மக்களைப் பாதுகாப்பதை விட, தமது பதவிகளைப் பாதுகாபதில் தான் குறியாக இருக்கிறார்கள்.இவர்கள் மக்களையோ, மண்ணையோ பாதுகாக்க மாட்டார்கள்.ஆகவே தமிழ் பேசும் மக்களே! பொத்துவில் இருந்து பொலிகண்டி வரையிலான அறவழி எழுச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்.திட்டமிட்ட இன அழிப்பு, கலாசார அழிப்பு, காணி அபகரிப்பு, உரிமைப் பறிப்பு, ஜனாசா எரிப்பு போன்ற அநாகரிக, அடிப்படைவாத, வக்கிரமான அரச செயற்பாடுகளை எதிர்ப்போம், தடுப்போம், முறியடிப்போம்.... ‘ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு’ என குறிப்பிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பில் தடுப்பூசி ஏற்றப்பட்டமை தொடர்பில்...

வைத்திய அதிகாரி வே.குணராஜசேகரம் தெரிவித்தார்.

ஏற்றப்பட்ட தடுப்பூசிகள் தொடர்பில் ஏதாவது முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளமை தொடர்பில் வினாவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில்

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார மணிமனைக்கு வழங்கப்பட்ட 3400 தடுப்பூசிகளை 14 சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்கள், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை உட்பட 3% வைத்தியசாலைகள் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஊழியர்கள் உள்ளடங்கலாக பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. இந் நிலையில் நேற்றைய தினம் 1230 க்கு மேற்பட்ட தடுப்பூசிகள் எற்றப்பட்டமைக்கான அறிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளது. இந் நிலையில் ஊசி ஏற்றப்பட்ட நபர்களிடம் இருந்து எவ்விதமான முறைப்பாடுகளும் இது வரை கிடைக்கப்பெறவில்லை.

நான் பல இடங்களில் சென்று இவ்விடயம் தொடர்பில் மேற்பார்வை செய்தேன் அனைவரும் சுறு சுறுப்பாக விருப்புடன் தடுப்பூசியினை பொற்றுக் கொள்வதனை அவதானிக்க கூடியதாக இருந்தது.

எஞ்சியுள்ள ஊசிகள் அனைத்தும் ஞாயிறு திங்கள்ஆகிய கிய தினங்களில் ஏற்றப்பட்டு நிறைவுறுத்தப்படும் என அவர் இதன் போது மேலும் தெரிவித்தார்,

# காத்தான்குடியில் சிலபகுதிகளை விடுவிக்கின்றேன்...

அனைத்தையும் தொடர்ச்சியாக மூடியிருக்க ஏனைய பகுதிகளை கடுமையான சுகாதார நடைமுறைகளுடன் விடுவிக்கிறேன் என காத்தான்குடி நகரமுதல்வர் எஸ்.எச்.எம். அஸ்பர் தெரிவித்துள்ளார்.

காத்தான்குடிப்பிரதேசம் கடந்த 31.12.2020 திகதிமுதல் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு கடந்த 21.01.2021ம் திகதி எட்டு கிராம சேவகர் பிரிவுகள் விடுவிக்கப்பட்டு 10 கிராம சேவகர்பிரிவுகள் தொடர்ந்தும் முடக்கப்பட்டிருந்தன.

இதேவேளை குறிப்பிட்ட அறிவிப்பு தொடர்பாக சுகாதாரப்பிரிவினரிடையே பல்வேறு கருத்துகள் நேற்று வெளிப்பட்டது. மாவட்ட கொவிட் பணிக்குழுவினால் தீர்மானம் எடுக்கப்பட்டு சுகாதாரப்பணிப்பாளர் நாயகத்தினால் முடிவு எடுக்கப்பட்டு மூடப்பட்ட பிரதேசங்களை உள்ளூர் அதிகாரிகள் விடுவிப்பதற்கான எந்த நடைமுறையும் இல்லையென சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# பொதுமக்களுக்கு காத்தான்குடி கொவிட் 19 தடுப்பு செயலணி விடுக்கும்...

10 கிராம சேவகர் பிரிவுகளுள் 167, 167உ, 167 இ அகிய 03 கிராம சேவகர் பிரிவுகள் தொடர்ச்சியாக முடக்கநிலைமையில் இருப்பதுடன் ஏனைய கிராம சேவகர் பிரிவுகளில்; அடையாளம் காணப்பட்ட வீதிகள் பகுதியளவில் முடக்கப்பட்டிருக்கும்.

2. ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ள சகல கிராம சேவகர் பிரிவுகளுக்குள்ளும் சகல வர்த்தக நிலையங்களும் வழமை போன்று திறப்பதற்கு அனுமதி வழங்கப்படுவதுடன், கடைகளுக்கு வெளியில் கைகளை தொற்று நீக்கம் செய்வதற்கான ஏற்பாடுகளையும் சமூக இடைவெளியினை பேணுவதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்வதுடன் கடைகளில் காணப்படும் ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் முகக்கவசம் கட்டாயம் அணிந்திருத்தல் வேண்டும்.

3. பாமசி தவிர்ந்த ஹோட்டல்கள் உட்பட அனைத்து வர்த்தக நிலையங்களும் இரவு 8.00 மணியுடன் மூடப்படல் வேண்டும்.

4. ஹோட்டல்கள், பேக்கரிகள் மற்றும் உணவகங்கள் அனைத்தும் பொதி செய்து மாத்திரம் விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளதோடு, எந்த நிலையிலும் கடைகளுக்குள் இருந்து சாப்பிட எவரையும் அனுமதிக்கக் கூடாது.

5. வீடு, கட்டுமானப்பணிகள், அதனோடு தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபடுவோர் (மேசன், ஓடாவி மற்றும் ஏனைய கூலி தொழிலாளிகள்) மற்றும் வீதி வியாபாரத்தில் ஈடுபடுவேர் என அனைவரும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் வெள்ளிக் கிழமை வரை காத்தான்குடி நகர சபையினால் பொது விளையாட்டு மைதானத்தில் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதனால் கட்டாயம் அனைவரும் பதிவு செய்தல் வேண்டுமென்பதுடன் மேற்படி நடவடிக்கைகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

6. தனியார்கல்வி நிலையங்கள், மதரசாக்கள், குர்ஆன் மதரசாக்கள் மற்றும் பாலர் பாடசாலைகள் போன்றன மறு அறிவித்தல் வரை மூடப்பட்டிருக்கும்.

7. கடற்கரை, ஆற்றங்கரை போன்ற பொழுதுபோக்கு இடங்களில் கூடி நிற்பது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

8. மறு அறிவித்தல் வரை பொதுச் சந்தைகள் மூடப்பட்டிருக்கும்.

9. திருமண, வலிமா நிகழ்வுகள் நடாத்துவதும் மண்டபங்கள், விடுதி அறைகள் வாடகைக்கு விடுவதும் மறு அறிவித்தல் வரை தடை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி தீர்மானங்களை சகல பொதுமக்களும் கண்டிப்பாக பின்பற்றவும். மேலும் எமது ஊரில் இன்னும் சில பகுதிகள் தற்போதும் முடக்கப்பட்ட நிலைமையிலேயே காணப்படுகிறது.

எனவே இப்பிரதேசங்களை எதிர்காலத்தில் விடுவிப்பது தொடர்பான முடிவுகளை எடுப்பதற்கு தாங்கள் பின்பற்றுகின்ற சுகாதார நடைமுறைகளே கவனத்தில் கொள்ளப்படும் என்பதனை பொறுப்புடன் ஏற்று நடந்து கொள்ளுமாறும் இவற்றை பின்பற்றாத பொது மக்கள், வர்த்தக நிலையங்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை கிரிக்கட் சபையின் ஸ்கோரர்களாக (Scorers) மூதூர் யூ.டி.பி.எம் (UDPM) அங்கத்தவர்கள் மூவர் தெரிவு








**(ஹஸ்பர் ஏ ஹலீம்)**

இலங்கை கிரிக்கட் சபையினால் கடந்த 2020 இல் நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற கிரிக்கட் புள்ளிக்கணிப்பாளர் (Scorers) தேர்வில் மூதூர் யூ.டீ.பீ.எம் (UDPM) அங்கத்தவர்களான . சிஹான் சுஹூட், . அப்துல் லத்தீப் பர்ஸாத் மற்றும் அப்துல் ஹுதா பிஸ்ருல் ஹாபி ஆகியோர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பரீட்சையானது 2020 தாம் ஆண்டு பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் திருகோணமலை மாவட்ட கிரிக்கட் சங்கம், குருநாகல் வெலகெதர மைதானங்களில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். மேற்படி பரீட்சையானது கிரிக்கட் புள்ளிக்கனிப்பின் மனுவல் மற்றும் ஆன்லைன் (Manual Scoring Online Scoring) ஸ்கோரிங்க் ஆகியவற்றினை உள்ளடக்கியதாகும். திருகோணமலை கிரிக்கட் வரலாற்றில் இலங்கை கிரிக்கட் சபையின் அங்கீகாரம் பெற்ற ஸ்கோரர்ஸ் தெரிவுசெய்யப்பட்டது இதுவே முதற்தடவையாகும். மாவட்டத்தில் மொத்தம் 09 பேர் தெரிவுசெய்யப்பட்ட அதேவேளை மூதூரில் இருந்து மூவர் தெரிவாகி உள்ளமையானது மூதூர் கிரிக்கட்டின் ஒரு மைல்கல் ஆகும்.

Sri Lanka Cricket Scorers

இலங்கை கிரிகட்டின் பெனல் நான்கின் நடுவரும், மூதூர் மத்திய கல்லூரியின் பழைய மாணவரும், மூதூர் வெஸ்டன் வோரியஸ் அணியின் தலைவரும் மற்றும் UDPM அமைப்பின் நடுவர்கள் பயிற்றுவிப்பாளருமாகிய சிஹான் சுகூத் அவர்கள் இலங்கை கிரிக்கட் ஸ்கோரராக 29012021 அன்று திருகோணமலை கிரிக்கட் சம்மேளனத்தின் கேட்போர் கூடத்தில் இலங்கை கிரிகட் ஸ்கோரர்கள் அதிகாரிகளினால் சான்றிதலைப்பெற்றுக்கொண்டார். அதேபோன்று

இலங்கை நடுவர்கள் சம்மேலனத்தின் நடுவரும், மூதூர் அல் ஹிதாயா மகா வித்தியாலயத்தின் பழையமாணவரும், மூதூர் நடுவர்கள் அபிவிருத்தி மற்றும் பயிற்றுவிப்பு அமைப்பின் (UDPM) தலைவரும், மூதூர் யங் லயன்ஸ் அணியின் தலைவரும், மற்றும் வெஸ்டன் வொறியஸ் திருமலை மாவட்ட அணிக்கான வீரருமாகிய அப்துல் லத்தீப் பர்ஸாத் அவர்களும் அன்றைய தினத்தில் தனது சான்றிதலைப் பெற்றுக்கொண்டார். மேலும்

அதே தினத்தில் இலங்கை நடுவர்கள் சம்மேலனத்தின் நடுவரும், மூதூர் மத்திய கல்லூரியின் பழையமாணவரும், மூதூர் வெஸ்டன் வோறியஸ் அணியின் தெரிவுக் குழு தலைவரும் மற்றும் UDPM அமைப்பின் அங்கத்துவருமாகிய அப்துல் ஹுதா பிஸ்ருல் ஹாபி அவர்களும் இலங்கை ஸ்கோரர்ஸ் அதிகாரிகளால் நியமனக்கடித்தினையும் மற்றும் சான்றிதலையும் பெற்றுக்கொண்டார்.

மேற்படி மூதூர் சார்பாக தெரிவாகிய மூவருக்கும், திருகோணமலை மாவட்டம் சார்பாக தெரிவாகிய ஒன்பது புள்ளிக்கணிப்பாளர்களுக்கும் Umpire Development Panel Of Mutur சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறார்கள்.

## அலறி எழுதிய ‘துளி அல்லது துகள்’ கவிதை தொகுப்பு நூல் அறிமுக விழா













**( ஐ.எல்.எம். நாஸீம், அபு ஹின்ஸா, ஏ.எல்.எம். சினாஸ், என்.என்.எம். அப்ராஸ், றாஸிக் நபாயிஸ் )**

கவிஞர், சட்டத்தரணி ஏ.எல்.எம். றிபாஸ் (அலறி) எழுதிய துளி அல்லது துகள் கவிதை தொகுப்பு நூல் அறிமுக விழா நேற்றுகாலை அல் மீஸான் பௌண்டஷன், ஸ்ரீலங்காவின் ஏற்பாட்டில் அவ்வமைப்பின் தவிசாளர் நூருல் ஹுதா உமரின் நெறியாள்கையில் மருதமுனை கலாச்சார மத்திய நிலையத்தில் எம்.எம்.எம். நூருல் ஹக் அரங்கில் நடைபெற்றது.

சுகாதார வழிமுறைகளை பின்பற்றி தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும், நாடறிந்த சுழலியலாருமான சிறுகதை எழுத்தாளர் (அம்ரிதா ஏயெம்) ஏ.எம். றியாஸ் அகமடின் தலைமையில் நடைபெற்ற



இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சரும் இலக்கிய விமர்சகருமான வஸீர் சேகுதாவூத் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டார். நூலின் பதிப்புரையை பேஜஸ் புத்தக நிலைய நிறுவுனரும், பிரபல இலக்கிய ஆர்வலருமான, கவிஞர், அரசியல் செயற்பாட்டாளர் சிராஜ் மஸூரும், நூல் தொடர்பிலான கருத்துரையை சிறுகதை எழுத்தாளர்,விமர்சகர் உமா வரதராஜன் மற்றும் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் பதிவாளர், இலக்கிய விமர்சகர், கவிஞர் மன்சூர் ஏ காதிர் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நூலின் சமர்ப்பண பிரதிகளை மர்ஹூம் கவிஞர் அறநிலா குடும்பத்தின் சார்பில் அவரது மகளும், மருதூர் கோத்தனின் மகன் மர்ஹூம் கவிஞர் சட்டத்தரணி எம்.ஐ.எம். ரவூப் குடும்பத்தின் சார்பில் அவரது மகனும் பெற்றுக்கொண்டனர். இந்நிகழ்வில் கிழக்கு மாகாணத்தை சேர்ந்த பிரபல மூத்த இலக்கியவாதிகள், இளம் எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பு பிரதிகளை பெற்றுக்கொண்டனர்.









# வயல் அறுவடை ஆரம்பம்
## விளைச்சல் குறைவால் விவசாயிகள் பாதிப்பு






(ந.குகதர்சன்)

வாழைச்சேனை கமநல சேவை பிரிவுக்குட்பட்ட விவசாய நிலங்களில் தற்போது நெல் அறுவடை இடம்பெற்று வரும் நிலையில் விளைச்சல் குறைவாக காணப்படுவதுடன், வெள்ளத்தில் பாதிப்படைந்ததால் நெற்களில் கருப்பு நிறம் காணப்படுவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

வாழைச்சேனை கமநல சேவை பிரிவில் விவசாயம் செய்யப்பட்ட பதினையாயிரம் ஏக்கர் விவசாய நிலங்களில் வெள்ளத்தினாலும், நோயினாலும் பாதிக்கப்பட்ட நிலையில் 3850 ஏக்கர் வயல்கள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் பல்வேறுபட்ட நோய்கள் மற்றும் பல அழிவுகளில் இருந்து காப்பாற்றப்பட்ட வேளான்மை தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகின்றது.

அறுவடை செய்யப்பட்ட நெற்கள் சிலவற்றில் கருப்பு நிறமாக காணப்படுவதுடன் சில வேளாண்மைகள் நீரில் மூழ்கி காணப்படும் நிலையில் உள்ளதுடன் அதனை அறுவடை செய்யும் போது பாரிய நெல் சேதங்கள் ஏற்படுவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இம்முறை அறுவடையின் போது 20 தொடக்கம் 30 வீதம் வரை விளைச்சல் காணப்படுவதாகவும் அதனால் பாரிய நஸ்டம் ஏற்படுவதாகவும் நெற்களில் கருப்பு நிறம் காணப்படுவதாகவும் அதனை விற்பனை செய்யும் போது அதனை காரணம் காட்டி நெல்லின் விலையை வியாபாரிகள் குறைப்பார்கள் என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அரசாங்கத்தினால் நெல் கொள்முதல் செய்யப்படுகின்றது நெல் காய்ந்த நிலையில் இருந்தால் அரசாங்கம் நல்ல விலைக்கு வாங்கும் ஆனால் எங்கள் பிரதேசத்தில் தொடர்ச்சியாக பெய்த மழை காரணமாக வெள்ளத்தில் எங்களது வயல்கள் பாதிப்படைந்ததால் நாங்கள் பாரிய நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

# திருமலை மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தருக்கு பிரியா விடை வைபவம்



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றிய எஸ்.கே.டி.நெரன்ஞன் எதிர்வரும் திங்கட்கிழமை திருகோணமலை மாவட்ட நீர்ப்பாசன திணைக்களத்தின் நிர்வாக உத்தியோகத்தராக கடமையை பொறுப்பேற்கவுள்ளார்.

இதனை முன்னிட்டு வெள்ளிக்கிழமை மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள தலைமையில் பிரியாவிடை வைபவம் அவருக்காக ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன்போது அவரது சேவையை பலரும் பாராட்டியதுடன் அரசாங்க அதிபரால் நினைவுப்பரிசும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பதவி நிலை உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# கொவிட் -19 தொடர்பில் மாணவர்களின் நலனில் அரசு சார்பற்ற நிறுவனங்கள் அக்கறை செலுத்த வேண்டும்
## அரசு அதிபர் திருமதி ஸ்ரான்லி டீமெல்

( வாஸ் கூஞ்ஞ)



பாடசாலை மாணவர்களுக்கு கொரோனா 19 தொற்று நோய் தொடர்பாக சரியான அறிவுறுத்தல் இல்லாமையால் பாடசாலை செல்லும் மாணவர்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத நிலையில் செயல்படுகின்றனர். அகவே அரசு சார்பற்ற நிறுவனங்கள் உங்கள் அபிவிருத்தி திட்டங்களில் இவற்றையும் கவனத்தில் எடுத்து செயல்பட வேண்டும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டீமெல் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் அரசு சார்பற்ற அமைப்புக்கள் மேற்கொள்ளும் வேலைத் திட்டங்களின் அனுமதி கோரல் தொடர்பாக கூட்டம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டீமெல் தலைமையில் மன்னார் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் புதன் கிழமை நடைபெற்றது.

இக் கூட்டத்தின்போது மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டீமெல் தொடர்ந்து இங்கு கருத்து தெரிவிக்கையில் கொரோனா அச்சுறுத்தல் மன்னாரில் தொடர்ந்து காணப்படுவதால் நாம் எமது மாணவ சமூகத்தையும் இவ்விடயத்தில் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

நான் நேரடியாக மேற்கொள்ளப்பட்ட அவதானத்தில் அதிகமான மாணவர்கள் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காது பாடசாலை சென்று வருகின்றனர். இவர்களில் பலர் பாடசாலைகளுக்கு வெளியே வரும்போதும் போகும்போதும் முகக்கவசம் அணியாது செல்வதை கவனிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இதில் சிலர் மாஸ் இவைகளை அணியாது தங்கள் புத்தகங்களுக்குள் வைத்து கொண்டு செல்வதையும் கவனிக்கக்கூடியதாக இருந்தது. அத்துடன் ஒரு குடும்பத்தில் இரண்டு மூன்று பிள்ளைகள் கொண்டவர்கள் மாஸ் வாங்க முடியாத நிலமையும் உண்டு.

ஆகவே பாடசாலைகளில் இவர்களுக்கு சரியான விழிப்பணர்வு வழங்கப்படுவதுடன் ஓரிரு அரசு சார்பற்ற நிறுவனங்கள் இவ்விடயத்தில் அக்கறை காட்டி வருகின்றபோதும் இன்றைய சூழலில் இயன்ற அளவு அனைத்து அரசு சார்பற்ற நிறுவனங்கள் மாணவர்கள் மத்தியில் கொவிட் 19 தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான திட்டங்களையும் முன் வைக்கப்பட வேண்டும் எனவும் இவற்றுக்கான உதவிகளை செய்யவும் முன்வர வேண்டும் எனவும் அவர் இவ்வாறு கேட்டுக் கொண்டார்.

# வெளிநாட்டு கொக்கு இன பறவைகள் வருகை




(ந.குகதர்சன்)

வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் நாவலடி பிரதேசத்தில் நீர் நிலைகள் உள்ள பகுதியில் அறியவகை வெளிநாட்டு கொக்கு இன பறவைகள் நிற்பதைக் காண முடிகின்றது.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் மழை பெய்து வரும் காரணமாக உள்நாட்டு இன கொக்கு இனத்துடன் வெளிநாட்டு அறியவகை கொக்கு இன பறவைகள் இணைந்து உணவுகளை தேடுவதை அவதானிக்க முடிந்தது.

குறித்த பகுதிகளில் வெளிநாட்டு அறியவகை கொக்கு இன பறவைகள் இம்முறை வருகை தந்துள்ளமையானது பெரிதும் ஆச்சரியத்தினை ஏற்படுத்தும் வகையில் காணப்படுகின்றது.

# தனிமைப்படுத்தப்பட்டுள்ள காத்தான்குடியில் தபால் விநியோக நடவடிக்கைகள்

(ஜவ்பர்கான்)

மட்டக்களப்பு காத்தான்குடியில் 10 கிராம சேவையாளர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ள போதிலும் பொது மக்களின் நன்மை கருதி தபால் விநியோக நடவடிக்கைகள் வழமைக்கு திரும்பியுள்ளன

.காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவு தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் காத்தான்குடி தபாலகத்தினால் வைத்தியசாலையிருந்து வரும் மருந்துகள் விநியோகம் மற்றும் தபாலகத்தில் ஏனைய நடவடிக்கைகள் இடம்பெற்று வந்தன.

இந்த நிலையில் காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் எட்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டதையடுத்து காத்தான்குடி தபாலகத்தினால் தபால் விநியோகிக்கும் நடவடிக்கைகள் வழமைக்கு திரும்பியுள்ளன.

அத்துடன் காத்தான்குடி தபாலகத்தில் மீனவர் மற்றும் விவசாய ஓய்வூதியம் வழங்கும் நடவடிக்கைகளும் கடந்த சில தினங்களாக இடம்பெற்று வருவதாக காத்தான்குடி தபாலகத்தின் தபால் அதிபர் முகம்மட் ஹசன் தெரிவித்தார்

காத்தான்குடி தனிமைப்படுத்தப்பட்டிருந்ததால் அங்கு வந்த தபால்கள் அனைத்தும் தேங்கியிருந்தன. இவைகளை தரம் பிரிக்கும் நடவடிக்கையில் காத்தான்குடி தபாலக ஊழியர்கள் ஈடுபட்டதுடன் அவைகளை விநியோகிக்கும் நடவடிக்கைகளையும் ஆரம்பித்துள்ளனர்.

காத்தான்குடி தபாலகத்தின் சேவைகள் அனைத்தும் வழமைக்கு திரும்பியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# மகாத்மா காந்தியின் 72 ஆதுவது சிரார்த்த தினம் மட்டக்களப்பில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு





(ரீ.எல்.ஜவ்பர்கான்)

இந்திய தேச பிதா அண்ணல் மகாத்மா காந்தியின் 72ஆவது சிரார்த்த தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இதனையொட்டி வடக்கு கிழக்கில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான நிகழ்வு மட்டக்களப்பு காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாகாத்மா காந்தி பூங்காவில் இடம்பெற்றது.

காந்தி சேவா சங்கத்தின் தலைவர் ஏ.செல்வேந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர மேயர் தியாகராசா சரவணபவன்; பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என்.சிறீநேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதுடன் மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. காந்தி விரும்பி பாடும் பாடலும் இசைக்கப்பட்டதுடன் 72 ஆவது சிரார்த்த தினத்தையொட்டி 72 நகர சுத்தி தொழிலாளர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.



## மண்மனைப்பற்று பிரதேச செயலக பொங்கல் விழா







(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைப் பகுதிக்கும், எழுவாங்கரைப் பகுதிக்கும், விவசாய தொழிலின் இணைப்பு பாலமாக திகழும் உழவர்கள் செறிந்துவாழும் மண்முனைப் பற்று பிரதேசத்தின், வேடர்குடியிருப்பு கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள வீரமா காளியம்மன் ஆலய முன்றலில் இவ்வாண்டிற்கான பிரதேச பொங்கல் விழா வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயம் அவர்களின் ஆலோசனையின் பெயரில் மண்முனைப்பற்று பிரதேசசெயலக திட்டமிடல் பணிப்பாளர் கி.குணரெட்ணம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மண்முனைப்பற்று பிரதேச சபையின் வேடர்குடியிருப்பு வட்டார பிரதேச சபை உறுப்பினர் சத்தியன் மண்முனைப்பற்று பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ருபேசன் சுந்தரலிங்கம், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஆலய நிர்வாக சபையினர் மற்றும் பொதுமக்கள், உள்ளிட்ட பலரும் இதன் போது கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது இந்த ஆண்டிற்கான மண்முனைப்பற்று பிரதேச பொங்கல் விழாவிற்கான புத்தரிசியை புதுப்பானையில் மண்முனைபிரதேசசெயலகதிட்டமிடல் பணிப்பாளர் கி.குணரெட்ணம் அவர்கள் இட்டு நிகழ்வினை ஆரம்பித்துவைத்தார்

கொட்டும் மழைக்கு மத்தியிலும் ஆலய முன்றலில் தமிழர் பாரம்பரியத்தைப் பேணி ஆலய நிர்வாக சபையினர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் ஆகியோர் ஒருங்கிணைந்து தங்களுடைய புதுப்பானைகளில் புத்தரியிட்டு பொங்கல் நடவடிக்கைகளை ஆரம்பித்தனர்.

புதுப்பானையில் பொங்கல் பொங்கிய வேளையில் கதிரவன் கலைக் கழகத்தினரின் கவிகரங்கமும், சுளகு நடனம் தமிழர் கலாசார பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் வகையிலே கலைநிகழ்வுகளும், இலங்கேஷ்வரன் இசைக்குழுவினரின் பஜனை நிகழ்வு நிகழ்வைச் சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# நாம் மௌனமாக இருப்பதாக நினைத்து விடவேண்டாம்

## எம்.பி திகாம்பரம் தெரிவிப்பு





(க.கிஷாந்தன்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பில் எதிர்வரும் 9 ஆம் திகதி பாராளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பவுள்ளோம் - என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

அட்டனில் சனிக்கிழமை நடைபெற்ற கட்சி செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

'அதிரடியான மாற்றங்களை ஏற்படுத்தப்போவதாக அறிவித்துவிட்டே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆனால் மொட்டு கட்சிக்கு வாக்களித்த மக்களே இன்று அரசின் செயற்பாடுகளை கடுமையாக விமர்ச்சிக்கின்றனர். பொருட்களின் விலைகள் நாளாந்தம் உயர்வடைந்துவருகின்றன. சிலவேளை நாமும் அந்த பக்கம் சென்றிருந்தால் இந்நேரம் மக்களின் சாபத்துக்கு உள்ளாக வேண்டி இருந்திருக்கும்.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுக்கப்படும் என உறுதிமொழி வழங்கப்பட்டது. ஜனாதிபதியும் இது குறித்து அறிவிப்புகளை வெளியிட்டிருந்தார். ஆனால் அவரின் உத்தரவைக்கூட கம்பனிகள் ஏற்பதாக தெரியவில்லை. மறுபுறத்தில் அடுத்த பேச்சுவார்த்தையில் வெற்றி நிச்சயம் என வீராப்பு பேசிய கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்களும் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை.

தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து போராடினால் மட்டுமே கம்பனிகளை ஒரு நிலைக்கு கொண்டுவரமுடியும். இதனை செய்வதற்கு மாற்று தரப்பினர் தயாராக இல்லை. சம்பள விவகாரம் தொடர்பில் எதிர்வரும் 9 ஆம் திகதி பாராளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பவுள்ளோம். ஆயிரம் ரூபா வழங்கப்படும் என அரசாங்கமே அறிவித்தது. எனவே, அதற்கு அழுத்தம் கொடுத்து தான் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும்.

நாம் மௌனமாக இருப்பதாக நினைத்துவிடவேண்டாம். சம்பள விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளோம். நாம் விழிப்பாக இருந்திருக்காவிட்டால், தொழிலாளர்களை காட்டிக்கொடுத்துவிட்டு இந்நேரம் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருப்பார்கள்.

அதே வேளை, எமது ஆட்சியில் 7 பேர்ச்சஸ் காணியில் அமைந்த வீட்டை குருவிக்கூடு என விமர்சித்து, 20 பேர்ச்சஸ் காணியை பெற்றுக்கொடுக்கப் போவதாகவும், சிளப் வீடுகள் அமைக்கப்படும் சூளுரைத்தவர்கள், இன்று 10 பேர்ச்சஸே வழங்குவதற்கே நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றார்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 4500 ஏக்கர் நெற்செய்கை கபிலநிறதத்தியினால் பாதிப்பு

(ஏறாவூர் நிருபர் , அனுருத்தன் )

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை பெரும்போக நெல் வேளாண்மையில் சுமார் நான்காயிரத்து ஐந்நூறு ஏக்கர் கபிலநிற தத்தியின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாய திணைக்கள பிரதிப் பணிப்பாளர் வீ.பேரின்பராஜா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நெல்வேளாண்மைப் பயிர்களில் தற்போது ஏற்பட்டுள்ள கபிலநிற தத்திகளின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக விவசாயிகள் மற்றும் தொழில் நுட்ப உத்தியோகத்தர்களை அறிவூட்டும் ஒரு நாள் செயலமர்வு கிரான் கமநல சேவைகள் நிலையத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.




விவசாய திணைக்கள பிரதிப் பணிப்பாளர் வீ.பேரின்பராஜா தலைமையில் நடாத்தப்பட்ட இச்செயலமர்வில் பேராதனை விவசாய திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் எஸ். ஜயசுந்தர மற்றும் போதனாசிரியர் தம்மிக சரத் சந்திர உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

கபிலநிறத் தத்ததிகள் உள்ளிட்ட பூச்சிகளை அடையாளங்காண்பது அவற்றைக் கட்டுப்படுத்தி முகாமைத்துவம் செய்வது மற்றும் சூழலைப்பாதிக்காத வகையில் இரசாயன மருந்துகளைப் பயன்படுத்துவது போன்ற விடயங்கள் அதிகாரிகளினால் இங்கு தெளிவுபடுத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுபோக நெல்வேளாண்மைச் செய்கையின்போது மண்டூர் பிரதேசத்திலும் பொரும்போகச் செய்கையின்போது கொக்கட்டிச்சோலை மண்டபத்தடி மற்றும் ஆயித்தியமலை போன்ற பகுதிகளிலும் கபிலநிறத் தத்திகளின் தாக்கம் காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளதாக விவசாயத்துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பேராதனை விவசாய திணைக்களத்தின் பயிர்ப்பாதுகாப்பு பிரிவினால் இச்செயலமர்வு நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன் வயல் பிரதேசத்திற்கு நேரடியாக சென்று கள பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

இவ் கலந்துரையாடல் நிகழ்வில் மட்டக்களப்பு பிரதி விவசாயப் பணிப்பாளர் வி.பேரின் பராஜா, வலய வடக்கு உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சித்திரவேல், விரிவுரையாளர் கலாநிதி ஜெயசுந்தர ஆகியோர்கள் கலந்து கொண்டு விரிவுரைகளை நடாத்தினார்கள்.

## பழுகாமத்தில் இரத்த தானம்





( சஞ்சயன் )

திருப்பழுகாமம் இளைஞர்களின் ஏற்பாட்டில் மூன்றாவது தடவையாகவும் இரத்ததான நிகழ்வு, பழுகாமம் வைத்தியசாலையில் நேற்று நடைபெற்றது.

'விலை மதிப்பிட முடியாத அறப்பணியில் நீங்களும் பெருமையுடன் பங்காளராகுங்கள்' எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இரத்ததான நிகழ்வில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப்பிரிவின் டாக்டர் திருமதி கீர்த்திகா மதனழகன் தலைமையிலான தாதிய உத்தியோகத்தர்கள், குருதிப் பரிசோதகர்கள், வைத்தியசாலை சிற்றுழியர்கள் என பலரும் கலந்து கொண்டு குருதிக் கொடைகளை பெற்றுக்கொண்டனர்.

போரதீவுபற்று இளைஞர்களின் பங்குபற்றுதலுடன் பொதுமக்கள் மத்தியில் குருதித்தான விழிப்புணர்வையும், கொரோனாவிற்கு பின்னர் வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ள குருதிப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் வகையிலுமே இவ்வாறான இரத்ததான நிகழ்வினை செய்துள்ளோம் என, ஏற்பாட்டுக் குழுவினர் இதன்போது தெரிவித்தனர்.

## கொம்மாதுறை பிரதானவீதியில் 9 அடி நீளமான முதலை



(ஏறாவூர் நிருபர் எம் .ஜி.ஏ. நாஸர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்தசில நாட்களுக்கு முன்னர் ஏற்பட்ட மழை வெள்ளத்தையடுத்து அழையாவிருந்தாளிகள் மனிதகுடியிருப்பு பிரதேசத்திற்கு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான விருந்தாளியொருவர் மட்டக்களப்பு-கொம்மாதுறை பிரதேசத்திலுள்ள குடியிருப்பு பகுதிக்கு நேற்றுவருகைதந்ததனால் அப்பிரதேச மக்கள் அச்சம் நிறைந்த பரபரப்படைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

வந்தாறுமூலை வாவியில் காணப்பட்ட சுமார் ஒன்பது அடி நீளமான முதலை கொம்மாதுறை பிரதான வீதியோரமுள்ள பகுதிக்கு வந்தது.

இதையடுத்து அப்பிரதேசவாசிகள் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு அறிவித்தனர்.

வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் அவ்விடத்திற்கு விரைந்து வருகைதந்து பெரும் பிரயத்தனத்துடன் அந்த முதலையைப் பிடித்து மண்முனை வாவியில் விட்டனர்.

ஏறாவூர்ப் பொலிஸாரும் இங்கு பிரசன்னமாயிருந்ததை அவதானிக்க முடிந்தது.





**செங்கலடி பதுளைவீதி இராஜபுரம் கிராமத்தில் இலங்கைதமிழரசுகட்சி மட்டக்களப்பு மாவட்ட வாலிபர் அணியின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கு அப்பியாசக்கொப்பிகள் வழங்கப்பட்டன. நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் பிரதேச சபை தவிசாளர் சர்வானந்தன், மட்டக்களப்பு மாவட்ட வாலிபர் அணி தலைவர் லோ.திவாகரன், செங்கலடி பிரதேச சபை உறுப்பினர்கள், வாலிபர் அணி உறுப்பினர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.**

சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
கிழக்குச் சூரியன்
31 JANUARY 2021, SUNDAY

# இறப்பதாக கூறிய பெண் வியாபாரியை ஆறுதல்படுத்திய மாநகர சபை உறுப்பினர்



(பாறுக் ஷிஹான்)

கல்முனை மாநகர சபையின் தற்காலிக அனுமதியில் இயங்கிய வீதியோர சந்தைகளை அகற்றுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த கொரோனா அனர்த்த நிலைமை காரணமாக ஒரு மாதத்திற்கும் மேலாக கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பாண்டிருப்பு சந்தைப்பகுதியை அண்டிய வீதியோரங்களில் தற்காலிக கடைகள் அமைத்து வியாபார நடவடிக்கைக்காக அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இவ்வாறு வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வியாபாரிகள் உரிய வரியினை செலுத்தி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

ஆனால், குறித்த இடத்திற்கு சென்ற கல்முனை மாநகர சபை அதிகாரிகள் 30 முதல் குறித்த பகுதிகளில் இருந்து தற்காலிக வியாபாரங்களை அகற்றுமாறும் வீதியோர போக்குவரத்து மற்றும் சில கடை உரிமையாளர்கள் முறைப்பாடு செய்திருப்பதாகவும் குறிப்பிட்டு சென்றிருந்தனர்.

இதனால் நிர்க்கதியான குறித்த வியாபாரிகள் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜனை அழைத்து முறைப்பாடு செய்ததுடன் இவ்விடயத்தில் தலையிட்டு தீர்வு ஒன்றினை பெற்றுத்தர வேண்டும் என கோரினர்.

இதனை தொடர்ந்து மாநகர சபை உறுப்பினரும் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி தீர்வினை பெற்றுத்தருவதாகவும் குறித்த இடத்தில் எவ்வித நடைபாதைகள் வீதி போக்குவரத்திற்கு இடைஞல் இன்றி வியாபாரத்தை தொடருமாறு வியாபாரிகளை கேட்டுள்ளார்.

மேலும் சில தரப்பினரின் காழ்ப்புணர்ச்சியினால் இவ்வாறான கீழ்த்தரமான நடவடிக்கைகளை கல்முனை மாநகர சபையினர் மேற்கொண்டுள்ளனர் எனவும் இதற்கு மிக விரைவில் முடிவு கட்டப்படும் என தெரிவித்தார்.

குறித்த இடத்தில் இருந்து தன்னை அகற்றினால் அவ்விடத்தில் தான் இறப்பதாக முஸ்லீம் பெண் வியாபாரி அழுது தெரிவித்த நிலையில் மாநகர சபை உறுப்பினர் ஆறுதல் வார்த்தை கூறி வியாபாரத்தை தொடருமாறு கூறினார்.

# கல்முனை பிரதேச நல்லிணக்க மன்றத்தின் விசேட ஒன்று கூடல்




(சர்ஜூன் லாபீர், எம்.என்.எம்.அப்றாஸ், ராசீக் நபாயீஸ்)

சமாதானம் மற்றும் சமூக நல்லிணக்க அமைப்பின் (PCA) கீழ் இயங்கும் கல்முனை பிரதேச நல்லிணக்க மன்றத்தின் வீசேட ஒன்று கூடல் நிகழ்வு நேற்று (30) சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்முனை ஹிமாயா வீச் ஹோட்டலில் கல்முனை பிரதேச நல்லிணக்க அமைப்பின் செயற்பாட்டாளர் எஸ்.எல்.ஏ. அஸீஸ் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக சமாதானம் மற்றும் சமூக நல்லிணக்க அமைப்பின் (PCA) தேசிய இணைப்பாளர் டி. இரஜந்திரன் கலந்து கொண்டு அமைப்பின் எதிர்கால செயற்திட்டங்கள் மற்றும் அமைப்பின் தேசிய ரீதியான செயற்பாடுகளை விபரித்தார்.

மேலும் இந் நிகழ்வில் சமாதான நல்லிணக்க அமைப்பின் நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் எம்.எல்.ஏ மாஜீத் உட்பட கல்முனை பிரதேச நல்லிணக்க் குழுவின் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

சுகாதார வழிமுறைகளை பின்பற்றி இந் நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# முஸரப் - முபீத் சந்திப்பு



(யு.எம்.இஸ்ஹாக்.)

நற்பிட்டிமுனை கிராமத்தின் அபிவிருத்தி தொடர்பாக கல்முனை மாநகர சபை உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி கல்முனை தொகுதி அமைப்பாளருமான சீ.எம். முபீத் திகாமடுள்ள மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். முஸரப் அவர்களுடன் இன்று பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

அதன் அடிப்படையில் நற்பிட்டிமுனையில் பல அபிவிருத்தி சாந்த விடயங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக மா.ந.உறுப்பினர் முபீத் தெரிவித்தார்.

# கல்முனை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் புதிய நிர்வாகத் தெரிவு




(றாசிக் நபாயிஸ்)

கல்முனை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் 2021ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக தெரிவு கல்முனை பிரதேச செயலகத்தில் இளைஞர் சேவை அதிகாரி எ.எல்.எம். அஸீம் தலைமையில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஏ.முபாறக் அலி, பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம். றம்சான், அக்கரைப்பற்று பிரதேச செயலக இளைஞர் சேவை அதிகாரி எம்.எம்.ஸமீலுல் இலாஹி, கல்முனை பிரதேச செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர் றாசிக் நபாயிஸ், கல்முனை பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் எ.எல்.எம்.அஸ்கி மற்றும் இளைஞர் கழக உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கல்முனை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் புதிய தலைவராக, ஆர்.எம்.ஜெஸார், உபதலைவராக, எ.எல்.எம்அஸ்கி, செயலாளராக பதவி வழியாக இளைஞர் சேவை அதிகாரி, உப செயலாளராக, எஸ்.எம்.ஆதில், பொருளாளராக, எம்.எம்.வாஜித், அமைப்பாளராக, ஐ.எம்.ஜாத் இஸ்மாயில், உப அமைப்பாளராக, ஏ.பி.சிம்சாட், ஊடக மற்றும் தகவல் பிரிவு இணைப்பாளராக எம்.என். எம்.அப்றாஸ் மற்றும் துறைசார் பிரிவு செயற்பாட்டு உறுப்பினர் 21 பேர் கொண்ட நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

இதன் போது, பிரதேசதத்தில் பதிவுசெய்யப்பட்ட இளைஞர் கழகங்களின் பிரதிநிதிகள், சம்மேளனத்தின் பழைய நிருவாக அங்கத்துவர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

சம்மேளனத்தின் எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் கடந்த கால செயற்பாடுகள் பற்றியும் இளைஞர்களுக்கும் அம்பாறை மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஏ. முபாரக் அலி விளக்கமளித்தார்.

# மட்டக்களப்பில் கல்விக் கருத்தரங்குகள்




(எஸ்.சதீஸ் )

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திலுள்ள கரடியனாறு மகாவித்தியாலயம் மற்றும் நாவற்காடு நாமகள் வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் க.பொ த சாதாரணதரம் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்குகள் கரடியனாறு மகாவித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் இ. செந்தில்நாதன் தலைமையில் புதுமை அமைப்பின் அனுசரணையுடன் சனிக்கிழமை (30) ஆரம்பமானது.

மட்டக்காப்பு மேற்கு வலயக்கல்விப் பணிப்பாளரின் ஆதரவுடன் நடைபெற்ற இந் நிகழ்வில் பாடசாலை அதிபர் இ. செந்தில்நாதன், புதுமை அமைப்பின் நிருவாக உறுப்பிர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

PHOTO DIGITAL INTERNATIONAL
No. 6N, Mosque Lane, Kalmunai.
MASTER PRINTERS
Best Regional Printer For the Year 2013
No. BG6, Maligawatta National House Scheme, Colombo 10.
Mobile : 077 613 9227 / 075 260 0333 / 075 963 0000 E-mail : mmjesmin06@gmail.com

# கிழக்கு மாகாணத்தில் நேற்று கொவிட் -19 தடுப்பூசி சுகாதாரத்துறையினருக்கு ஏற்றியபோது...






















# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கோவில் புனருத்தாரணமும்

# மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவும்



**(சகா)**

மட்டக்களப்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனில் புனரமைக்கப்பட்டு எழிலூட்டப்பட்ட பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் திருக்கோவிலின் மஹா கும்பாபிஷேகம் நிகழும் மங்களகரமான சார்வரி வருடம் தை மாதம் 19ம் நாள் சங்கடஹர சதுர்த்தியும் சுத்த யோகமும் கூடிய சுப தினத்தில் அதாவது ஆங்கில வருடப்படி 01.02.2021 திங்கட்கிழமையன்று நடைபெற திருவருள் கூடியுள்ளதையிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.)

ஆலயம் ஆன்மா இணைகின்ற இடமாகவும் இறைவன் உயிர்களைக் கடைத்தேற்றும்பொருட்டு அவர்களிடத்தில் இறங்கிவருகின்ற இடமாகவும் பாவிக்கப்படுகின்றது. ஆலயங்கள் சமூக,சமய கலாசார விழுமியங்களை கட்டிக்காக்கும் ஒரு நிறுவனமாகவும் சிற்பம், ஓவியம், நடனம், நாடகம், சங்கீதம் மேலும் இன்ன பிற கலைசார்ந்த மற்றும் ஆன்மீகத்துறைசார்ந்த விழுமியங்களை வளர்க்கும் உயர் இடமாகவும் ஆலயங்கள் விளங்கிவந்திருக்கின்றன.

ராமகிருஷ்ணமிஷன்கள் மற்றும் மடங்களில் காணப்படும் கோவில்கள் அங்குவரும் பக்தர்களின் ஆன்மீகப் பயிற்சிக்களமாகவும், தியானம் , ஜபம், பஜனை, சொற்பொழிவுகள், யோகப்பயிற்சிகள் போன்றவற்றைச் செய்துகொள்வதற்கான ஒருபுனிதத்தலமாகவும் விளங்கிவருகின்றன.

உலகளாவியரீதியில் 24ற்கும் மேற்பட்ட நாடுகளில் சுமார் 260க்கும் மேற்பட்ட கிளைகளுடன் ராமகிருஷ்ணமிஷன்கள் மற்றும் மடங்கள் தம்முடைய ஆன்மீகப்பணிகளைச் செய்துவருகின்றன. அங்கு ஏறக்குறைய 2000ற்கும் மேற்பட்ட துறவிகள் வாழ்ந்து மக்களது ஆன்மீக ஈடேற்றத்திற்கான போதனைகளையும் அதற்கான சாதனைப் பயிற்சிகளையும் நல்கிவருகின்றார்கள்

சுவாமி விபுலானந்தரின் காலத்தில் ராமகிருஷ்ணமிஷன் இலங்கைக்கிளையின் பணிகள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டன. அவரால் நாடெங்கிலும் ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன் பாடசாலைகள் 26 ஆரம்பிக்கப்பட்டு பரிபாலனம் செய்யப்பட்டுவந்தது. பின்னர் 1960களில் இப்பாடசாலைகள் யாவும் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டன. சனாதன தர்மத்தினனை அடியொற்றி ஆன்மீக ஈடேற்றத்திற்கான வழிகாட்டுதல்கள் மட்டுமன்றி 'ஜீவசேவையே சிவபூசை' எனும் சுவாமி விவேகானந்தரின் வழிகாட்டுதலை பின்பற்றி மக்களுக்குக் கல்வி, கலாசாரம்,, உயர்கல்வி கற்பதற்கான இலவச நிதி உதவிகள், வசதி குறைந்த பாடசாலை மாணவர்களுக்கு கல்வி கற்றலுக்கான உபகரணங்கள் வழங்குதல் உடபட மாணவர்களை இந்தியாவிற்கு அனுப்பி விசேட துறைகள் சார்ந்து உயர்கல்வி கற்பதற்காக அங்கு அவர்களுக்கு ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன.

அதுதவிர இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அம்மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குதல், மக்களுக்கான மருத்துவ சேவை நிலையங்களை அமைத்து வைத்திய சேவைகளை நல்குதல், விசேட மருத்துவ முகாம்களை ஏற்பாடுசெய்தல் போன்ற சமூகப்பணிகளுடன் ஆன்மீக அறநெறிப்பாடசாலைகள் நடாத்துதல், புத்தகங்கள் வெளியிடுதல், ஆன்மீகப்புத்தகங்களை கண்காட்சிப்படுத்தி சலுகைவிலையில் வழங்குதல், சர்வசமயப் பிரார்த்தனைகள் மற்றும் தலைமைத்துவப்பயிற்சி போன்றவற்றையும் வழங்கிவருகின்றது. இப்பணிகளிற்கு மகுடம் வைத்தாற்போன்று மட்டக்களப்பில் ஆதரவற்ற குழந்தைகளை பராமரித்து கல்வி மற்றும் இலவச வதிவிட வசதிகளுடன் சனாதனதர்மநெறிப்பட்ட குருகுல வாழ்வியலை வழங்கும் இல்லங்கள் ஆண்கள் மற்றும் பெண்களுக்கென தனித்தனியாக நடாத்தப்பட்டுவருகின்றன.

சுவாமி விபுலானந்தர், சுவாமி நடராஜானந்தர் யோன்றோர் உட்பட பல தூய துறவியரின் இணையிலா உழைப்பினால் காலம்காலமாக மேற்கொள்ளப்பட்டுவந்த இப்பணிகளின் காலத்தின்தேவைக்கேற்ற மற்றுமோர் பரிணாமமே புனரமைக்கப்பட்டு எழிலூட்டப்பட்டு இன்று எழிலுருவாய் நிமிர்ந்துநிற்கும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கோவிலாகும்.

1960ம் ஆண்டுகளில் சுவாமி ஜீவனானந்தா அவர்கள் நிதிப் பற்றாக்குறையின் காரணமாக முன்னிருந்த ராமகிருஷ்ணர் திருக்கோவிலை சிறிய அளவில் வடிவமைத்திருந்தார். எனினும் தமது இந்த மனக்குறையை தமது அருக்கத்தொண்டர்கள் மற்றும் பக்தர்களிடம் கூறி எதிர்காலத்தில் இந்தக்கோயில் சிறந்தமுறையில் மிகப்பெரிய அளவில் வளரவழிசெய்யவேண்டும் என்கின்ற கருத்தையும் முன்வைத்திருந்தார்.. ஏறக்குறைய 60 ஆண்டுகள் கழிந்தபின்னர் இன்று அந்த திருப்பணி புர்த்திசெய்யப்பட்டுள்ளது.புனருத்தாரணம் செய்யப்பட்ட பின்னர் தற்போது சமார் 500 பக்தர்கள்வரை அமர்ந்து பிரார்த்தனையிலீடுபடக்கூடியதாயுள்ளது.

அத்துடன் சுவாமி விபுலானந்தரின் விரிவான வாழ்க்கை வரலாறு, சுவாமி விபுலானந்தர் இளைஞர்களுக்குகூறும் அறிவுரைகள், படக்கதைகள் போன்றனவும் சுவாமி விபுலானந்தரின் அனைத்து ஆக்கங்களையும் உள்ளடக்கி 'சுவாமி விபுலானந்தரின் சிந்தனைகள்' என்ற தலைப்பில் நான்கு அல்லது ஐந்து தொகுதிகளாக அவருடைய ஆக்கங்களையும் , யாழ்நூல் மற்றும் மதங்கசூளாமணி போன்ற நூல்களையும் மக்களிடையே மீண்டும் எளிய வடிவில் ஆக்கி 'ஆன்மீகக் கலாசாரமும் சுவாமி விபுலானந்தரும்' என்கின்ற தலைப்பில் மக்களிடையே சென்றடையும் வண்ணம் ஏற்பாடுகளை இந்தக்கோவில் கும்பாபிஷேக விழாவைத்தொடர்ந்து எதிர்காலத்தில் செய்துமுடிப்பதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆத்மீக அரும்பொருட்காட்சியகம் ஒன்றினை சுவாமி விபுலானந்தரின் சமாதி அமைந்துள்ள மணிமண்டபத்தில் அமைத்து, புனரமைத்து மெருகூட்டப்படவுள்ள சுவாமி விபுலானந்தரின் சமாதி திறப்பு விழாவினையும் இவ்வாண்டு ஆகஸ்ட் மாதமளவில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளதால் அதற்கான உங்களது தார்மீக ஒத்துழைப்புக்களையும் ஆலோசனைகளையும் மேலும் வேண்டிநிற்கின்றோம்.



எல்லாம்வல்ல பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரதும் தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியாரதும் வீரத்துறவி விவேகானந்தரினதும் அருளாசிகள் உங்கள் அனைவர்மீதும் என்றென்றும் நிறைந்திருக்க இந்த கும்பாபிஷேக நாளில் பிரார்த்திக்கின்றோம்.

**நன்றி**

**சுவாமி நீலமாதவானந்தர்,**

**ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன்,**

# கவிதை அமைப்பு

**(ஆரையூர் அருள்)**

கவிதைக்குக் கல்வியா? மகோபலமா தேவை என்ற கேள்வியை உண்மைக் கவிஞர்கள் உள்ளதால் கேட்பார்களாயின்,"கல்வி ஒருவரைப் புலவனாக்குமே தவிரக் கவிஞனாக்காது கவிஞனாவதற்கு மனோபாவம் முக்கியமே தவிர மொழிகூட இாண்டாம் இடமே என்பதை உணர்வார்கள். முகாகவி பாரதியாரின் மனோபாவம் தான் அவரை கவிதையில் நாட்டத்தை நிலை நாட்டியது முதலில் அவருக்கு கவிஞருக்குரிய மனோபாவம் தான் இருந்தது. பிறகுதான் கல்வியதை வளர்த்து விட்டது. முறைப்படி கல்வியறிவில்லாத சிறுகூடற்பட்டி முத்தையாவை ஒருமாபெரும் கவிஞனுக்குரிய மனோபாவம் தான் கவியரசு கண்ணதாசனாக்கியது. கல்வியறிவானது மூளையில் மையம் கொள்ள, மனோபாவம் இதயத்தில் மையம் கொள்கிறது. கல்வியாளன் மூளையிலிருந்து வார்த்தைகளைத் தாமாகவே ஊற்றெடுக்க வைக்கின்றான். கவிஞர்கள் கையாளும் சொற்களுக்கும் இலக்கண வரம்புக்குள் இருப்பவர்கள் கையாளும் சொற்களுக்கும் அதிகவித்தியாசமுண்டு கல்வி கற்றவர்கள் எல்லோரும் கவிதை எழுத முடியாமைக்குகாரணமிதுதான் கவிதைக்கு மனோபாவம் வேண்டும்.

கவிதைக்கு யாரும் வரைவிலக்கணம் கூறவுமில்லை, கூறவும் முடியாது. கவிதை என்றால்என்ன என்று மனதில்தோன்றும்வரிகளை மட்டும் பதிவிட முடியும். அந்தவகையில் ஏனைய கலைகளில்உணர்ச்சிகளின்நிழல்களை மட்டுமே தரிசிக்க முடியும். ஆனால் கவிதைகளிலோ உர்ச்சியின் விசுபரூபத்தையே தரிசிக்கலாம் என்னும் வைரமுத்துவின் வரிகளுக்கிணங்க, கவிதை என்பதை "உணர்வில் ஊறிமொழியில் தேறிவருவது", "உணர்ச்சிகளைச் சுமந்து செல்லும் வார்த்தை வாகனம்", "உள்ளத்தின் அடியூற்றிலிருந்து பிரவாகமெடுக்கும் உணர்ச்சிக்குமுறல்கள்" "உணர்ச்சிக் கணைகள் நமதைத்துளைக்கும் போது உண்டாகும் உயிர்க்கசிவு". "இரத்தத்தோடு கலந்த இறந்தகால நினைவுகளை இறக்கிவைத்து இளைப்பாறும் இடம்", "வார்த்தை உடைகளை உடுத்தி, அழகாக பயணிக்கும் அற்புதக் காட்சி", "வாழ்க்கையே கவிதை", "வாழ்க்கையை கவிதையாய் வாழ்பவன் வார்த்தையே கவிதை" தற்காலத்தில் எழுதப்படும் கவிதைகள் பெரும்பாலும் புதுக்கவிதை, மரபுக் கவிதை என இருவகைப்படும். சுப்பிரமணியபாரதியார் "காட்சி" என்ற தலைப்பில் எழுதிய வசனக்கவிதையையே "புதுக்கவிதை", எழுததன்னை தூண்டியதாக, புதுக்கவிதையை முதலில் எழுதியவரான ந.பிச்சைமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டுள்ளார். புதுக்கவிதையின் ஆரம்பத்தின் பொற்காலம் 1930 - 1940 களாகும். ந.பிச்சைமுத்தே,கு.ப. இராஜகோபாலன், வல்லிக்கண்ணன் அவர்கள் புதியவழியில் கவிதை எழுத ஆரம்பித்த நற்காலங்கள் ஆகும்.

அறிந்தகருத்துக்களையும் உணர்ந்த உணர்ச்சிகளையும் பிறருக்கு எடுத்துக் கூற உதவுகின்ற ஒரு கருவிமொழியாகும். மொழியின் ஒலிவடிவம் பேச்சு. மொழியின் வரி வடிவம் வசனம். இசைப்படுத்தப்பட்ட பேச்சு செய்யுள். இங்குவசனம் உரைநடை என்றும் செய்யுள் "பா"என்னும் அழைக்கப்படும். இம்மூன்றுமே (பேச்சு, வசனம், செய்யுள்) மொழிநிலையாகும். ஆனால் கவிதை என்பது வெளிப்பாட்டு நிலையை குறிக்கும். இந்த வெளிப்பாடு உள்ளத்து உணர்வுகளோடு ஒன்றி நிற்பதனால் இது வசனத்தைவிட பேச்சையும் செய்யுளையும் நாடிநிற்கக் கூடியது. யாப்பில் எழுதப்படுவதெல்லாம் கவிதையும் அல்ல. கவிதையை யாப்பிலும் எழுதலாம் என்பதனை விளங்கிக் கொள்ள வேண்டும். யாப்பிலக்கண பண்புகள் சிலவற்றை ஏற்று, இயல்பான பேச்சு நிலையிலை பெரும்பாலும் சார்ந்து நிற்பது புதுக்கவிதை. யாப்பில் அமைந்த செய்யுளை சார்ந்து நிற்பது மரபுக்கவிதை.

இனிபுதுக்கவிதைக்குரிய சிறப்பான அடையாளங்கலான படிமம், குறியீடு, கூர்மை, சுருக்கம் என்பவற்றை நோக்குவோம்.

படிமம் :பொருளை மனதிற்கும் அறிவுக்கும் உணர்த்தப் பயன்படுவது உவமை, உருவகத் தொடர்புகளை அடுக்குதல் வழியாகபடிப்பவர் மனதில் ஒன்றைப் படிமமாக்குதலே இதன் பயனாகும்.

குறியீடு :என்பது ஒன்றின் வாயிலாக இன்னொன்றை உணர்த்தும் அடையாளமாகும். படிப்பவரைச் சிந்திக்கத் தூண்டிக் கவிதைப் பொருளுடன் ஒன்றிக்கச் செய்வதாகும்.

கூர்மை : சொல்லவரும் செய்திகளைச் சுற்றிவளைக்காமல் துல்லியமாக உணர்த்தும் இயல்பினையே கூர்மை என்பர்.

சுருக்கம் : சொல்ல எடுத்துக் கொண்ட கருப்பொருளை சுண்டக் காய்ச்சிமாக சுருக்கச் சொல்லுதலே சுருக்கம்.

இவைகள் புதுக்கவிதைகளை இனம்பிரிக்கும் (தரப்படுத்தும்) அடையாளங்களேயன்றி முடிந்த முடிவான இலக்கணங்கள் அல்ல இலட்சணங்கள்.

புதுக்கவிதைபற்றி "யாப்புடைத்த கவிதை, அணையுடைத்த காவிரி, யாப்பற்ற கவிதை இயற்கையெழில் இருக்கச் செயற்கையணி எதற்கென்று உடையுடன் ஒப்பனையும் நீக்கிவிட்ட கன்னி" என்று சி.மணியும், "இலக்கணச் செங்கோல், யாப்புச் சிம்மாசனம், எதுகைப்பல்லக்கு, மோனைத்தேர்கள், தனிமொழிச் சேனை, பண்டிதபவனி இவை எதுவும் இல்லாத கருத்துக்கள் தம்மைத் தாமே ஆழக் கற்றுக்கொண்ட புதியமக்கள் ஆட்சிமுறையே" என்று மு. மேத்தாவும், "புதுக்கவிதை என்பது சொற்கள் கொண்டாடும் சுதந்திரவிழா"என்று இரா.வைரமுத்தும், "சொற்சிக்கணமும் பொருட்செறிவுமே புதுக்கவிதையின் அடிப்படைக்குணங்கள்", என்று விமசகர் பாலாவும், "மொழியெங்கே முற்றாககரைந்து போகின்றதோ அங்கேதான் புதுக்கவிதை பிறக்கும்"என்று ஜெயக்காந்தனும், "புதுக்கவிதையோ யாப்பின் பண்புகள் சிலவற்றை ஏற்றுக்கொண்டாலும் மொழியின் மற்றொரு நிலையான இயல்பான பேச்சுநிலையை பெரிதும் சார்ந்து நிற்கின்றது" என்று அப்துல் றகுமான் போன்ற பலகவிஞர்கள், அறிஞர்கள், புதுக்கவிதை பற்றிப் பலவேறுபட்ட கருத்துக்களை கூறி நிற்கின்றனர்.

புதுக்கவிதை என்பதனை புதுக்கூவிதை என நான் மற்றொரு கண்ணோட்டத்தோடு நோக்கி எனது அபிப்பிரயாயத்தையும் கூற விளைகின்றேன். இது அபிப்பிராயமே தவிர முடிந்த முடிவு அல்ல (புதுக்+விதை)த்தல் என்பது காடழித்து, சேனைப் பயிர் செய்வது போன்றது. காலத்திற்கேற்ற சுழற்சிபயிர்ச்செய்கை போன்று வரம்பு வடிவமைப்பின்றி, வடிகாலமைப்பின்றி, உழவின்றி, உரமின்றி விதைத்து விளைவை அறுவடை செய்வது போன்றது. புதுக்கவிதை பற்றிமேற்போந்த அறிஞர்களின் கருத்துக்கு இவ் விளக்கமும் ஒன்றுமை காட்டலாம் எனநினைக்கின்றேன். புதுக்கவிதைகளை வாசிக்கும் போது மேற்போந்த விடயங்களை புரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்து "மரபுக்கவிதை" அமைப்பையும் (மரபுக்+விதை)த்தலில், வரம்புகட்டி, வடிகாலமைத்து, உழவடித்து, நீர்ப்பாச்சி, விதைத்து, களையகற்றி, உரமிட்டு, காவல்காத்து முறையாகச் செய்து விளைவைப் பெறுவது போன்ற இலக்கண இலட்சணங்களுக்கமைய "எழுத்தினால்ஆனது அசை, அசைகளினாலானது சீர், சீர்களாலானது அடி, அடிகளினாலானது பா, சீரும் சீரும் இணைப்புத்தலை, எதுகை, மோனை போன்ற அழகிய அமைப்புக்கள் தொடை இந்த யாப்பிலக்கணத்தினை அடிப்படையாகக் கொண்டு விரிவாக விளக்கமாக படைக்கப்படுவது மரபுக்கவிதையாகும்.

## தாயன்பூ

தரணியிலே சிறந்தபூ
தவத்தினிலுமுயர்ந்தபூ
உதிரத்திலேகலந்தபூ
உவமையில்லாஉயரன்பூ
தாயன் பூஅதுதாயன்பூ



சாதிபேதநிறமற்றபூ
சமயம் கடந்துநிற்கும்பூ
இதயக் குளத்தில் பூத்தபூ
இமயத்திலும் முயர்ந்தபூ
தாயன்பூ அதுதாயன்பூ

பத்துமாதபந்தப்பூ
நித்தியமானசொந்தப்பூ
முத்தாய் வளர் முழுவன்பூ
தித்திக்கின்றதேனன்பூ
தாயன்பூ அதுதாயன்பூ

தன்னலம் கருதாப்பூ
எண்ணிலங்கா இன்பப்பூ
துன்பம் துடைக்கும் தூயன்பூ
உண்மையானபேரன்பூ
தாயன்பூ அதுதாயன்பூ

**(ஆரையூர் அருள்)**

## நெஞ்சம் மறப்பதில்லை

நெஞ்சம் மறப்பதில்லை
நினைவலைகள் மடிவதில்லை
நீதிசாவதில்லை
நீலக்கடல் ஓய்வதில்லை
எட்டிக்காய் இனிப்பதில்லை
பட்டமரம் தழைப்பதில்லை
செல்லரித்த சிந்தனைகள்
சாதனையாய் மலர்வதில்லை
உண்மைஉறங்குவதில்லை
பொய்மைவாழ்வதில்லை
இளமை இலையுதிர் காலமில்லை
முதுமை இளவேனியாவதில்லை
பிறப்பவரென்றும் நிலைப்பதில்லை
இருப்பவரிதைநினைப்பதில்லை
கண்டவர் விண்டதில்லை
விண்டவர் கண்டதில்லை
தைப்பனிசுடுவதில்லை
தமிழ்ச்சுவைகசப்பதில்லை
காகிதப்பூ மணப்பதில்லை
காலம் காத்திருப்பதில்லை
சந்தேகம் புகுந்துவிட்டால்
சந்தோசம் வருவதில்லை
மெய்ப்பொருள் வாழ்வில்வந்தால்
கைப்பொருள் தேவையில்லை.

**(ஆரையூர் அருள்)**

## நம்ஊர் வழக்கு....

பூப்படைந்த பிள்ளையை
கண்ணுற்ற சமயம்
துப்பி மண்ணை எறிந்து
கண்ணூறு கழித்து
வெள்ளி தெரியும் பொழுது
தங்க மாலை அணிவித்து
குவிந்து நின்று குரவையிட்டு
மஞ்சள் நீரூற்றி
பலகாரம் சுட்டு பலதிசையும் வீசி
ஆராத்தி எடுத்து
வெடில் கொழுத்தி
தென்னம் பிள்ளையும்
நம் பிள்ளையே
ஆனந்தமாய் ஆரவாரிக்கும்
வழக்கும் நம்மூர் வழக்கே!




# நன்றி கடன்

**(ஆரையூர் அருள்)**

இளந் தென்றலின் வருடலால் சதிராடும் நெற்கதிர்கள் சதங்கை ஒலிநிகர்க, கண்கவர் மின்விளக்குகளின் பல வண்ணம் கண்டு விண்மீன்கள் அஞ்சிநிற்க, வானில் மஞ்சி, வஞ்சி உருக்கொண்டு உலாவிவர, அலங்கார வளைவுகள் தெருமறித்து வானவில்லை பழித்துநிற்க, தொங்கு தோரணைகள், சோபனங்கள் சொல்லித் திகைக்கவைக்க, விஞ்சுமேடை நறுமலர்கள், நாற்றிசையும் மணம்பரப்ப கடலது கொந்தளித்து கொப்பழிக்கும் அலைகளது தரைதாவிப் பாய்கின்றனவோடு வன மண்முனை தென்மேற்குப் பிரதேச மக்கள்வெள்ளம் மேடைசூழ நிரம்பியவழிய சொர்கத்தின் திறப்புவிழா இல்லை" இல்லை" சொந்தங்களின் விருப்பு விழாவா என மனம் மயங்குகின்றதே. ஆமாம் இது வஞ்சப்புகழ்ச்சியல்ல. தென்மேற்குப் பிரதேச மக்கள் மன எழுச்சி விழா இரவின் கோலக் காட்சிகயையே இவ்வதிசயங்கள், அற்புதங்கள் கோடிட்டுக் காட்டி நிற்கின்றன.

மேடை ஒலிவாங்கிக்கு முன்னிற்கும் கம்பீரமான தோற்றத்தின், கணீரென்ற குரலொலி புயலுக்குப் பின் அமைதி என்பதை மெய்ப்பிக்கும்படியே, அங்கே மௌனம் குடிபு, தலைவரின் குரலலையின் பரிவு குழுமியிருந்த மக்களை எழுந்துநிற்க வைக்கின்றது, எமது விடுதலைக்காக, தங்களது இன்னுயிர்ப்பூக்களை தமிழுக்காக உதிர்த்து எம்மண்ணை மீட்டெடுக்க வித்துடல்களை இம்மண்ணுக்கே விதைத்து சத்தாக்கிய அந்த தியாகிகளுக்காக, முதலில் கைச்சுடரேற்றி, மௌன இறைவணக்க மூலம் அவர்களது கனவு நனவாக பௌர்ணமி நிலவிலே பளிச்செனத் தெரியும் கொக்கட்டீஸ்வரர் கோபுரம் நோக்கி நெக்குருகிப் பிரார்த்தித்து விம்பியழுக வீழிநீர் துடைத்து அமர்கின்றது மக்கள்வெள்ளம். விண்ணகத்துத் தாரகைள், மண்ணுலகைப் பொன்னுலகாக மாற்றுகின்ற மாயமிதுவோவென எண்ணிமுடிக்கும் முன்பே, மின்னலெனத் தோன்றிய மெல்லியர்கள் வசந்தனாடி மறைந்தபின் சொல்லுகின்றார் தலைவர் "இவ் விழாவின் விடிவெள்ளிகள் எமது பிரதேச மக்களின் மனப்பாங்கு மாற்றத்திற்கு வழிவகுத்த இன்றைய இளைய தலைமுறையினரே. இற்றைக்கு ஏறத்தாள ஐந்தாறு சகாப்த காலங்களுக்கு முன் எமது பிரதேச மக்களின் மனநிலை பற்றி இரை மீட்டால், நெஞ்சை நெருடுகின்றது. வஞ்சகப் போடிமார்கள், தனப்பிரவுகளின்சுயரூப அபிங்கள், தாங்கள் சுபபோகம் துய்த்து மற்றையவர்கள் முல்லைக்காரர்களாக, நிலபுலவடிமைளாக, தங்களுக்கே கைகட்டி, வாய் புதைத்து சேவகம் செய்ய வேண்டும், தங்கள் குடும்ப வாரிசுக்களே கல்விகற்று வளமுடன் வாழ வேண்டும். எமது தலைமுறை இவர்களுக்கெல்லாம் அடிமைகளே என்ற மடமை விலங்கிட்டகாலம். அதை உடைத்தெறிந்து, அனைவருக்கும் கல்வி, சகலரும் சமமே என்ற தத்துவ், தாரக மந்திரத்தை மெய்ப்பிக்க வைத்த எமது இன்றைய சந்ததியினரின் திறமைகளைப் பாராட்டி வளரும்

தலைமுறையினருக்கும் மனத் திடத்தை வளர்க்கும் நோக்கில் எமது பிரதேச மக்களில் மனமுவந்து வந்து கடந்த காலங்களில் கல்வி,கலை, கலாசாரங்களில் சாதனை புரிந்த சாணக்கியர்கள் முன்போல் வேதனை கொள்ளாதிருக்க விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டி கொண்டாடப்படும் இவ்வெளிச்சி விழாவில் இப்போது சாதனையாளருக்கு தங்கப்பதக்கஙகளும் தரச்சான்றிதழ்களோடு



சன்மானப் பரிசில்களும், கல்வி கற்றோராலும் பெற்றோராலும், உயர்வுக்கு துணையுற்றோராலும் வழங்கி வைக்கப்படும், என்று கூறி பரிசில்களை வழங்கி பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட தலைவரது உரை நூற்றுக்கு நூறு உண்மையென பரிசில்களை வழங்கியவர்களின் போற்றுதல்களும்,˙ மனநிறைவோடு மக்கள் வணங்கிய கரகோசங்களும் உறுதி செய்த வண்ணமே இருந்தது. அடுத்து, எமது பிரதேசத்திற்கு உரித்தான மற்றுமோர் மனம் கவர் நிகழ்வு "யார் காரணம்" எனும்.

முனையூர் நாகசக்தி கலாமன்றத்தினால் தயாரிக்கப்பட்ட "கரகாட்டம்" என்று தலைவரின் அறிவிப்பைத் தொடர்ந்து மக்களின் மனமகிழ்ச்சி ஆரவாரம் முடிவதற்கு முன்பே, கரகாட்ட மாணவர் குழாம் மேடையை அலங்கரிக்க, மக்கள் கண்ணிமைக்காது பார்த்திருக்க, தயாரித்து, நெறியாள்கை செய்தவரின் நுட்பமும், யுக்தியும் படிமுறையாக எமது பிரதேசம் மக்களின் தெட்டத் தெளிவான எமது விடிவுக்கான போராட்டமும் எமது சந்ததியினரின் கல்வியும் எமது இரு கண்கள் என்ற இவரது அசைக்க முடியாத, நிதர்சனமான, தர்க்கமான முடிவை பசுமரத்தாணியாக மக்கள் மனதில் பதிவை ஏற்ப்படுத்திய பாங்கு மக்களைப் புல்லரிக்க வைத்துப் புளங்காகிதத்தில் மூழ்கடித்துக் கொண்டிருந்த வேளை அவர்களது மனத்திரையில் அதர்மம் தலைதூக்கும் வேளை தோறும் அவதாரம் எடுத்து தர்மத்தை ஸ்தாபிதம் செய் வேனென்ற கண்ணபிரானின் மறு அவதாரமோ? அல்லது அசுர குணங்கள் தலைதூக்கும் காலை அதனை அழித்தொழிக்க உதித்த கருணைக் கந்தனோ? எமது சமூக விடுதலைக்காக அவதரித்த அவதார புருடரே எமது இளைஞர்கள் என்று அனைவரும் நினைத்தவாறு, மானசீகமாக வணங்கிக் கொண்டிருந்தனர் என்பதனை அவர்கள் வழிசொட்டும் ஆனந்தக் கண்ணீர் அறை கூவிக் கொண்டேயிருந்தது. எவ்வளவு நாசுக்காக, சூசகமாக, எளிமையாக

எமது பண்பாட்டுக் கலைவடிவம் மூலம் படம் பிடித்துக் காட்டிய தயாரிப்பாளருக்காக தட்டிய கரகோசம் எமது சாதனத்தலைவரின் புகழை வானகம் வரை எடுத்துச் சென்றது. அடுத்த கலை நிகழ்வாக கண்டு களிப்பதற்கு முன்பு இவ்விழாபற்றிச் சிறு சொற்பொலிவாற்ற எமது பிரதேச செயலாளர் சிற்றம்பலத்தை அழைத்தமாகின்றேனென தலைவர் கேட்டு நீங்க இது மக்கள் எழிச்சிவிழா எனவே நான் எவரையும் விழித்து எமது உரையைத் தொடங்கவில்லை மக்கள் எழுச்சி பெற விழிப்புணர்வு எவ்வாறு எற்ப்பட்டது. இல்லை ஏற்படுத்தப்பட்டது என்பதனை தலைவரும் தெளிவுரக் காட்டமும் சிறப்புற மனப்பதிவை ஏற்படுத்தியது. அனைவருக்கும் கல்வியென்ற கொள்கைதனை என்று கல்வியில் தரப்படுத்தல் என்ற துவேச இனவிகிதாசார அளவு கோல் கொண்டளக்க அடக்குமுறையாட்சியாளர்கள் துணிந்தனரோ? அன்றிலிருந்து எமது தலைமுறையினருக்கு சமத்துவக் கல்வியை வடகிழக்கெங்கும் வழங்கவேண்டுமென்பதே தேசியத்தலைவரின் திடமான கல்வி கொள்கையாக உருவகம் பெற்று விட்டது அந்த இலட்சியத்தை எய்துவிடுவதிலே கண்ணும் கருத்துமாகச் செயற்பட

வேண்டும்மென்று கல்வித்திட்டங்களை வகுத்து எம்முறவுகளுக்கு வாழ்கின்ற இடங்களுக்கு ஏற்றவாறு கல்வியாளர்களின் கருத்துகளை தகுதியானவர் மூலம்பெற வழிசமைத்து நடைமுறைப்படுத்துவதற்குரிய வழிமுறைகளை மேற்கொண்டதாலும் மேற்க்கொண்டு வருவதாலும் ஏற்பட்ட திருப்பு முனையே இந்த எழுச்சி விழாவாகும் எமது வடகிழக்கு வருங்கால வாரிசுகள் ஏற்றத்தாழ்வுன்றி எல்லோரும் சமத்துவக் கல்வி கற்று அமைய இருக்கும் எமது பிரதேசத்தின் கல்விமான்களாக பொருளாதாரப் புரட்சிப் புயல்களாக மாறுவதோடு மட்டுமல்லாது சமுதாய மாற்றத்தின் சரணாலயங்களாக பாடசாலைக் கல்வியையும் மாற்றியமைப்பதோடு எமது இயற்கை வளம் நிறை பொருளாதாரப் பொக்கிச வடகிழக்கில் உற்பத்தி செயல்படும் அனைத்துப் பொருளாதாரப் பண்டங்களும் ஏற்றுமதி செய்கின்ற ஏற்றமுடையவர்களாக மாற்றிவிட வேண்டும். அம்மாற்றங்களே எமது விடிவுக்காக உயிர்நீத்த மாவீரர்களுக்கு செய்யும் மகத்தான நன்றிக்கடன் என்தை எவறும் மறுக்கவோ, மறுதலிக்கவோ முடியாதென்பதனை அழுத்தம் திருத்தமாகவும், ஆணித்தரமாகவும், இறுதியாகவும், உறுதியாகவும் கூறிக் கொள்வததோடு மக்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்கிணங்க எமது போராளிகள் பற்றிய பாடலை தம்பி சரவணனைப் பாடவேண்டி இடம்கொடுத்து ஒதுங்கிக்கொள்ளுகின்றேன் என ஒதுங்கிக் கொள்ளும் முன்பே, சரவணனின் உணர்ச்சி மிக்க, உதிரத்தைச் சூடேற்றும, போராளிகள் பெருமை கூறும் இனிய கானம் கேட்க ஏகோபித்த கரகோசத்தின் மத்தியில் சரவணன் பாடுகின்றான்.

"போராளிகள் எங்க போராளிகள்
போராளிகள் எங்க போராளிகள்
சீரான நிகருள்ள நெறியாளர்கள்
தேசிய தமிழினக் காவலர்கள்.

(போராளிகள்)

மாமேதை தலைவரின் வழித்தோன்றல்கள் - தமிழ்
தாகம் தனியாத தகை சான்றோர்கள்
பேரான போராட்டப் பெருவீரர்கள் - பல
வீரான களம் வெண்ட வெற்றியாளர்கள் - பேரான
(போராளிகள்)

தற்றுணிவோடு போர்புரிந்த சாமத்தியமம்
கற்றோரைக் காமுறும் லாவண்ணியம்
மற்றோரை மதிக்கின்ற மனப்பக்குவம் - உயிர்ப்
பற்றற்று போராடிய குணப்பக்குவம் - நிறை
(போராளிகள்)

சத்தான மனத்திட வீரியம் கொண்டு
முத்தான எம் வாழ்வை அமைக்கவென்று
வித்துடலை மண்ணில் விதைத்தவஉகள் - உயிரை
சொத்தாக தமிழுக்கே அழித்தவர்கள் - உயர்

(போராளிகள்)

கரவாத நெஞ்ச கருமவீரர்கள்
உழவர் போற்று முத்தமர்கள்
வரலாறு புகழ் கூறும் மாவீரர்கள் - நாளை
தரமான தமிழீழநேச வாரிசுகள் - எங்கள்

(போராளிகள்)

சொற்சுத்தத்துடன், சுருதிபிசகாது சரவணன் பாடிய பாடலை கேட்டு, மகிடிக்குக் கட்டுப்பட்ட நாகம் போல உணர்வலைகளுள் சிக்கி, தமைமறந்து போராளிகளின் தியாக, வீரதீர செயல்களில் தம்மையும் இணைக்க எத்தனித்து, பிரமைபிடித்த பதுமைகள் போலல்லாது, நிலைமறந்து, தலையசைத்து, தாளமிட்டு, இரசனையோடுகளித்திருந்த காட்சி, போராளிகளின் பெருமைக்கே சாட்சியானது போல, தான்தோன்றீஸ்வர ஆலயமணியொலி விடியலை விளக்கி ஒலிக்க மக்கள் அனைவரும் வீடு நோக்கி இனிய எண்ணங்களை மனத்தகத்தே சுமந்து நடைபயின்று கொண்டிருந்தனர்.

( இக்கதையில் வரும் பெயர்கள் அனைத்தும் கற்பனையே)